முரசு : 13 ஒலி: 263
8 பக்கங்கள் விலை: 500 காசுகள்
MALAI MURASU
TN/WR/SLM(E)27/2024-2026
RNI Regn. No. TNTAM/2016/75064
மாலை முரசு
சேலம்
WWW.MALAIMURASU.COM
சனிக்கிழமை
26-10-2024 (ஐப்பசி-9)

★

மேற்காசியாவில் மீண்டும் பதற்றம்: ஒரு மாதத்திற்குப் பிறகு பதிலடி:

# ஈரான் தலைநகர் மீது இஸ்ரேல் குண்டு மழை!

★ ராணுவ நிலைகள் தகர்க்கப்பட்டன;

★ விமானங்கள் ரத்து; பதிலடிக்கு ஈரானும் தயார்!!

டெஹ்ரான், அக். 26–

ஈரான் தலைநகர் மீது இஸ்ரேல் போர் விமானங்கள் இன்று அதிகாலை குண்டுமழை பொழிந்தன. ராணுவ நிலைகள் தகர்க்கப்பட்டன. இதற்கு ஈரானும் பதிலடி கொடுக்க தயாராகி வருகிறது. இதனால் மேற்கு ஆசியாவில் மீண்டும் பதற்றம் உச்சம் பெற்றுள்ளது. ஈரானும், ஈராக்கும் விமானச் சேவைகளை அடியோடு ரத்து செய்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் அடைந்த யூதர்களுக்கு எதிராக அங்கு தாக்குதல்கள் நடத்தப்பட்டு வந்தன. இதையடுத்து அவர்களது பூர்வீக பூமியான பாலஸ்தீனத்தில் அவர்களுக்கென்று இஸ்ரேல் என்ற பெயரில் தனி நாடு உருவாக்கப்படும் என்று 1917–ஆம் ஆண்டு இங்கிலாந்து அறிவித்தது.

அந்தக் கால கட்டத்தில் பாலஸ்தீனம் உள்ளிட்ட பல அரபு நாடுகள் யாவும் துருக்கியின் கட்டுப்பாட்டில் இருந்தது. முதல் உலகப் போர் 1914 முதல் 1918 வரை நடந்தது. இந்தப் போரில் ஜெர்மனியின் பக்கத்தில் துருக்கி நின்று போரிட்டது.

ஆனால் அந்தப் போரில் ஜெர்மானிய அணி தோற்றது. இங்கிலாந்து, பிரான்சு, அமெரிக்கா அடங்கிய நேச நாடுகள் வெற்றி பெற்றன. துருக்கியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த நாடுகள் இங்கிலாந்து மற்றும் பிரான்சு ஆகியவற்றின் மேற்பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டன.

அந்த வகையில் இங்கிலாந்தின் கட்டுப்பாட்டில்

6–ம் பக்கம் பார்க்க



சேலம் மாவட்டம், ஏற்காட்டில் நடந்த மக்கள் சந்திப்பு முகாமில் 34 பயனாளிகளுக்கு ரூ.10.40 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் வழங்கினார். அருகில் கலெக்டர் பிருந்தாதேவி, மலையரசன் எம்.பி. மற்றும் பலர் உள்ளனர்.

மழை வராமல் இருக்க அகல்விளக்கு ஏற்றி பிரார்த்தனை:

## மாநாட்டில் குவியத் தயாராகும் விஜய் கட்சித் தொண்டர்கள்!

### தயார் நிலையில் மாநாட்டுத் திடல்!!

விக்கிரவாண்டி, அக்.26–

தமிழக வெற்றிக் கழக மாநாடு நாளை நடைபெற உள்ள நிலையில் மழை வராமல் இருக்க அங்கு அகல் விளக்கு ஏற்றி பிரார்த்தனை நடைபெறுகிறது. மேலும் மாநாட்டுக்கு வருகை தர அக்கட்சித்தொண்டர்கள்தயாராகி வருகின்றனர்.

நடிகர் விஜய் தமிழக வெற்றிக் கழகம் என்ற கட்சியை தொடங்கியுள்ளார். அக்கட்சியின் கொடி மற்றும் கொள்கை விளக்கப் பாடல்கள் அறிமுக விழா சென்னையை அடுத்த பனையூரில் அவரது கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிலையில் அக்கட்சியின் முதல் மாநில மாநாடு அக்டோபர் 27–ஆம் தேதி நடத்த முடிவு செய்யப்பட்டது. அதற்கான இடம் தேர்வு செய்யும் பணி நடைபெற்றது. இறுதியில் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டியை அடுத்த வி.சாலையில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

அதற்காக 85 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. மாநாடு நாளை (27–ஆம் தேதி) நடைபெறும் நிலையில் அங்கு பணிகள் விறுவிறுப்புடன் நடைபெற்றது. தற்போது அங்கு மாநாட்டுத் திடல் அமைக்கும் பணி முழுமையாக நிறைவடைந்து தயார் நிலையில் உள்ளது.

இந்நிலையில் தமிழக வெற்றிக்கழக மாநாடு நாளை மாலை 4 மணியளவில் துவங்கி நடைபெறுகிறது. மாநாட்டில் கட்சியின் தலைவர் விஜய் கட்சி கொடியை ஏற்றி வைக்க உள்ளார். அதற்காக நேற்று பகல் 12.30 மணி அளவில் மாநாட்டு முகப்பில் விழுப்புரத்தைச் சேர்ந்த மணி என்பவருக்கு சொந்தமான இடம் 225 சதுர அடியை ஐந்து ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எடுத்து அதில் 100 அடி உயர கொடி கம்பத்தை மாநில பொதுச் செயலாளர் புஸ்சி ஆனந்த் பூஜை செய்து நட்டார்.

மாநாட்டின் போது மேடையில் இருந்து நடுவே அமைக்கப்பட்டுள்ள ரேம்பில் நடந்து வந்து கட்சி கொடியை நடிகர் விஜய் ரிமோட் மூலம் ஏற்றி வைக்க உள்ளார். மாநாட்டின் மேடை அருகே இணையதள வசதிக்காக தகவல் தொழில்

3–ம் பக்கம் பார்க்க

ரெயிலில் ரூ.4 கோடி பிடிப்பட்ட விவகாரம்:

## 20 கிலோ தங்கக்கட்டிகளை விற்றுக் கொடுத்த பா.ஜ.க. எம்.பி.!

### விசாரணையில் திடுக்கிடும் தகவல்!!

சென்னை, அக்.26–

தாம்பரம் ரெயில் நிலையத்தில் ரூ.4 கோடி பிடிபட்ட விவகாரத்தில், புதுச்சேரி பா.ஜ.க எம்.பி., 20 கிலோ தங்கக் கட்டிகளை விற்றுக் பணமாக கொடுத்தது சி.பி.சி.ஐ.டி போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

நாடாளுமன்ற தேர்தலின்போது போது (ஏப்ரல் மாதம்) சென்னை தாம்பரம் ரெயில் நிலையம் வந்த, நெல்லை எக்ஸ்பிரஸ் ரெயிலில் உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்ட ரூ.4 கோடி பணத்துடன் 3 பேர் பிடிபட்டனர்.

பிடிப்பட்ட நபர்கள், தமிழக பா.ஜ.க சட்டமன்ற கட்சித் தலைவரும், நெல்லை தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளருமான நயினார் நாகேந்திரனுக்கு சொந்தமான சென்னையில் உள்ள ஒரு ஓட்டலில் பணியாற்றும் ஊழியர்கள் என்பது தெரியவந்தது. அந்த பணத்தை நயினார் நாகேந்திரனுக்கு தேர்தல் செலவுக்காக எடுத்துச் சென்றதாக கூறப்பட்டது. இதை, நயினார் நாகேந்திரன் மறுத்தார்.

இந்த வழக்கின் விசாரணை சி.பி.சி.ஐ.டி.க்கு மாற்றப்பட்டு, நயினார் நாகேந்திரன் மற்றும் தமிழக பா.ஜ.க அமைப்புச் செயலாளர் கேசவ விநாயகம், மாநில பொருளாளர் எஸ்.ஆர்.சேகர், தொழில்

3–ம் பக்கம் பார்க்க

பவுனுக்கு ரூ.520 உயர்வு:

## தங்கம் விலை இன்று மேலும் அதிகரிப்பு!



சென்னை, அக்.26–

தங்கம் விலை இன்று மேலும் அதிகரித்துள்ளது. அதாவது பவுனுக்கு ரூ.520 உயர்ந்துள்ளது. ஆனால் வெள்ளி விலையில் மாற்றம் இல்லை.

தங்கம், வெள்ளி ஆகியவற்றின் விலைகள் தொடர்ந்து உயர்ந்த வண்ணம் உள்ளன. இந்த மாதம் 20–ஆம் தேதி ஒரு பவுன் தங்கம் விலை ரூ.58 ஆயிரத்தை முதன்முறையாக கடந்தது.

அன்றைய தினம் ஒரு பவுன் தங்கத்தின் விலை ரூ.58,240 ஆக இருந்தது. அதன் பிறகு தொடர்ந்து உயர்ந்துகொண்டே வருகிறது. இன்று பவுனுக்கு ரூ.520 அதிகரித்தது. இதன் மூலம் ஒரு பவுன் தங்கத்தின் விலை ரூ.58,880 ஆக உள்ளது. ஒரு கிராம் தங்கத்தின் விலை ரூ.7,360 ஆகும். இன்னும் ஓரிரு நாளில் ரூ.59 ஆயிரத்தை கடந்து விடும்.

இன்று வெள்ளியின் விலையில் மாற்றம் இல்லை. ஒரு கிராம் ரூ.107–க்கு விற்கப்படுகிறது.

அவிநாசி அருகே இன்று விபத்து:

## லாரி மீது கார் மோதியது; மாணவிகள் உள்பட 3 பேர் சாவு!

### தீபாவளி கொண்டாட வந்த போது பரிதாபம்!!



அவிநாசி,அக்.26–

அவிநாசி அருகே நின்றிருந்த லாரி மீது கார் மோதியதில் கல்லூரி மாணவிகள் 2 பேர் உள்பட 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். தீபாவளி கொண்டாட காரில் வந்து கொண்டிருந்த போது இந்த பரிதாப சம்பவம் நடந்தது.

பெங்களூரில் இருந்து கோவை நோக்கி ஒரு கார் வந்து கொண்டிருந்தது. இந்த காரில் கோவை தொழில் அதிபர் பாலசுப்பிரமணியத்தின் மகள் அபர்ணா(26), அவரது தங்கை ஹேமா (21) மற்றும் கோவை பேப்பர் குடோன் உரிமையாளர் மகன் மோனிஷ்பாபு (28) ஆகியோர் இருந்தனர். இன்று அதிகாலை 3 மணி அளவில் திருப்பூர் மாவட்டம், அவிநாசியை அடுத்த பழங்கரை பகுதியில் கார் வேகமாக வந்து கொண்டிருந்தது.

அப்போது டீசல் தீர்ந்ததால் சாலையோரம் மணல் லாரி ஒன்று நின்று கொண்டிருந்தது. இந்த லாரியின் பின் பக்கம் கார் திடீரென பயங்கரமாக மோதியது. இதில் காரின் முன் பகுதி முற்றிலும் நொறுங்கிவிட்டது. காருக்குள் இருந்த 3 பேரும் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். மாணவி அபர்ணா சத்தீஸ்கர் மாநிலம் ராய்ப்பூரில் எம்.பி.ஏ. 2–ம் ஆண்டு படிந்து வந்தார். அவரது தங்கை ஹேமா கோவையில் உள்ள அம்ரிதா கல்லூரியில் என்ஜினீயரிங் படித்து வந்தார். மோனிஷ் பாபு அபர்ணாவின் நண்பன் ஆவார்.

தொழில் அதிபர் பாலசுப்பிரமணியத்தின் மனைவி மகாலட்சுமி வஞ்சிபாளையம் பள்ளியில் முதல்வராக பணியாற்றி வருகிறார். தீபாவளியை கொண்டாட விமானத்தில் பெங்களூருக்கு வந்த அபர்ணாவை காரில் மோனிஷ் பாபுவும், ஹேமாவும் அழைத்து வந்த போது இந்த சோக சம்பவம் நடந்தது. அவிநாசி போலீசார் விசாரித்து வருகின்றனர்.



காவிரி நீர் பிடிப்பு பகுதியில் பெய்து வரும் கனமழையின் காரணமாக தர்மபுரி மாவட்டம் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் வினாடிக்கு 35 ஆயிரம் கன அடியாக தண்ணீர் 2–வது நாளாக தொடர்ந்து வருகிறது. இதனால் 14–வது நாளாக அருவியில் குளிக்கவும், பரிசல் இயக்கவும் தடை தொடர்கிறது.




## உதவிக்கரம் நீட்ட ஒரு அதிகாரி இல்லையே..

# ஆய்வாளர்களின் அபயக் குரலின் துடி துடிப்பு..

நான் ஒரு ஆய்வாளர் பேசுகிறேன்.
யாரையும் புண் படுத்தும் நோக்கத்தோடு நான் பேசவில்லை.புண்பட்டுக்கிட்டும் என் போன்ற காவல் அதிகாரிகளுக்கு யாராவது மருந்து தடவ பட மாட்டார்களா என்ற ஆதங்கத்தில் பேசுகிறேன். பாரம்பரியமிக்கது தமிழ் நாடு காவல் துறை. பெயர் பெற்ற ஸ்காட் லான்ட் காவல் துறைக்கு இணையாக, இன்று உலகத்திற்கு சவால் விடும் அளவிற்கு முன்னேறியும் உள்ளது.

### கொத்தடிமை போன்று நடத்தி வருகின்றனர்

தமிழ்நாடு காவல்துறை மட்டும் சுதந்திர காலத்திற்கு முன்பிருந்த நிலையிலேயே இருந்து வருகின்றது. காவல் துறையினருக்கு கிடைக்க வேண்டிய அனைத்து வாய்ப்புகளும் வழங்கப்படாமலேயே உள்ளது என்பது தான் வேதனைக்குரிய விஷயம். ஆனால் நடப்பது என்ன,இதை வாங்கித் தர வேண்டிய உயர் அதிகாரிகள் சுயநல நோக்கோடு அவர்களுக்குண்டான அனைத்து உரிமை, வாய்ப்பு அக்கறை, அந்தஸ்து, ஆகியவற்றை தாங்கள் பெற்றுக்கொண்டு கீழ்நிலை அதிகாரிகளான காவல் ஆய்வாளர் சார்பு ஆய்வாளர் காவலர்கள் ஆகியோரை கொத்தடிமை போன்று நடத்தி வருகின்றனர் என்பதை சொல்லாமலும் இருக்க முடிவதில்லை. காவல் துறை அதிகாரிகளுக்கு மட்டுமல்லாமல் அனைத்து துறை அதிகாரிகள் பணியாளர்களுக்கும், அவர்களுக்கு கீழ் செயல்படும் நிலையில் தான் காவல் ஆய்வாளர் சார்பு ஆய்வாளர் காவலர்கள் நிலை உள்ளது . அதனை தடுக்க வேண்டிய உயர் அதிகாரிகள் தடுக்காமல் ஆதரிக்கும் நோக்கில் காவலர்களையே தண்டிக்கும் அவல நிலை உள்ளது என்பதை பார்க்கும் போது மனது பதை பதைக்கிறது.
தட்டிக்கேட்க ஆளில்லாத அனாதைகளாகக் கிடக்கிறோம். காவலர்களின் மன உளைச்சலை உணரும் அளவிற்கு மற்ற துறைகளில் கொடுமைகளை அனுபவித்தவர்கள் இல்லை.

### பணிச்சுமையால் கடும் மன அழுத்தம்

வருடத்திற்கு 300 வழக்குகள் பதிவான காவல் நிலையத்தில் இன்று பத்து மடங்கு கூடி 3000 வழக்குகள் தற்போது பதிவாகியுள்ளது .ஆனால் காவல்துறையினரின் எண்ணிக்கையோ புதிய பணியிடமோ உயர்த்தப்படாமல் உள்ளது. 300 வழக்குகளுக்கு பொறுப்பாக இருந்த அதிகாரி 3000 வழக்குகளுக்கும் பொறுப்பாக இருந்து குறைந்த அளவிளான காவலர்களைக் கொண்டு பணி புரியும் போது பணிச்சுமையால் கடும் மன அழுத்தம் ஏற்படுவதால் |அனைத்து வழக்குகளுக்கும் போதுமான கவனம் செலுத்த இயலாமல் போய்விடுகிறது.
அரைகுறை நேரத்தில் வழக்குகளை நடத்தும்போது அது



குற்றவாளிகளுக்கு தண்டனை வாங்கி கொடுக்க இயலாமல் போய்விடுகிறது. அதனால் துறைத் தண்டனை சம்பந்தப்பட்ட காவல் ஆய்வாளர் சார்பு ஆய்வாளர்களுக்கே கிடைக்கிறது என்பது தான் வேதனையான விஷயம். கீழ்நிலை அதிகாரிகளுக்கு ஏற்படும் மன உளைச்சலை புரிந்து கொள்ள மனிதாபிமானம் கூட இல்லாத நிலையில் தான் மேல் அதிகாரிகள் உள்ளனர்.

காவல் துறையினரின் பணி மற்ற துறைகளில் இருந்து மாறுபட்டது. பொதுமக்கள் தங்களின் தேவைக்காக மற்ற துறைகளை நாடி மனு அளித்து நன்மை அடைகின்றனர். அதனால் அந்த துறையின் மதிப்பு கூடுகிறது. மக்களும் அத்துறையை எதிரி போல் நினைப்பது இல்லை . ஆனால் காவல் துறையை நாடும் ஒருவர் மற்ற ஒரு பொது ஜனம் மீது நடவடிக்கை எடுக்க கோரி மனு அளிக்கும் போது சட்டப்படி கடமையாற்றும் அதிகாரி மனுதாரருக்கு நண்பராகவும் எதிர் மனுதாரருக்கு எதிரியாகவும் ஆகி விடுகிறார். அவ்வாறான சூழ்நிலையில் வருடத்திற்கு 3000 க்கும் மேற்பட்ட மக்கள் தங்கள் எதிரிகளாக கீழ் மட்ட அதிகாரிகள் காவலர்களை நினைக்கின்றனர். நாம் செய்த தவறினால் தான் நாம் தண்டனை அடைந்தோம் என நினைக்கும் அளவிற்கு இருக்கும் மக்கள்மி மிகவும் சொற்பம்.

### காவலர்களை மதிப்பதில்லை

தவறு செய்தவர்கள் தங்களைக் காத்துக் கொள்ள காவல்துறையினர் மீது சொல்லும் அபாண்ட குற்றச்சாட்டுகள் பொய் எனத் தெரிந்தும் சில நபர்களை திருப்தி படுத்த வேண்டும் என்ற ஒரே காரணத்திற்காக பணியிட மாற்றம் உட்பட பல தண்டனை அடைகின்றனர் என்பதில் எந்தவிதத்தில் நியாயம் இருக்கிறது ?
கேட்க யாரும் இல்லாத நிலையில் காவல் துறை அலுவலர்கள் இருப்பதை தெரிந்து கொண்ட மற்ற அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் காவல்துறை அலுவலர்களுக்கு மரியாதை கூட அளிப்பது இல்லை. அவ்வளவு ஏன் காவல்துறையினரின் தேவைக்காக உருவாக்கப் பட்ட காவல் அமைச்சுப் பணியாளர்கள் கூட காவல்துறை அதிகாரி மற்றும் காவலர்களை மதிப்பதில்லை.அமைச்சுப் பணியாளர்களுக்கு கும்பிடு போட்டு நடிக்க வேண்டிய அவலம் உள்ளது. அவர்களுக்கு அமைப்புகள் உண்டு கேட்டு பெறுவார்கள் .அவர்களுக்கு கேட்டது கிடைக்கிறது. ஏனெனில் அவர்களுக்கு அமைப்பு இருக்கிறது.மற்ற அரசுத்துறைகளில் ஏழு வருடத்திற்கு ஒரு பதவி உயர்வு, பத்தாம் வருடத்தில் அடுத்த பதவி உயர்வு என உள்ள நிலையில் ,2008 ஆம் ஆண்டில் பணிக்கு சேர்ந்த உதவி ஆய்வாளர்கள் 16 ஆண்டுகள் ஆகியும் ஒரு பதவி உயர்வு கூட பெறாமல் பணிபுரிந்து வருகின்றனர்.

### தங்கள் உரிமைகளை பெறுகின்றனர்

அவர்கள் படும் இன்னல் சொல்லி மாளாது
மற்ற துறையினர் சட்ட விரோதமாக போராட்டம் நடத்தியோ, அரசை ஆளும் கட்சியை அச்சுறுத்தி தட்டிக்கேட்டு உரிய காலத்தில் தங்கள் உரிமைகளை பெறுகின்றனர். அவர்கள் உரிமை பெறுவதற்கு நாங்கள் பாதுகாப்பு அளிக்க வேண்டியதுள்ளது. மற்ற அரசுத்துறைகளில் பதவி உயர்வு தள்ளிப் போனால் வர்களுக்கென்று உள்ள அமைப்புகள் போராடி பெற வேண்டியதை பெற்று தருகிறது.ஆனால் எங்க்ளைப் போன்றவர்களை பற்றி நினைக்கவோ , அவர்கள் பெற வேண்டியதை நிறைவேற்வோ யாரும் முன்வருவதில்லை. மற்ற துறைகளில் ஓய்வு வயதை இன்னும் 5 வருடங்கள் அதிகரித்தாலும் சுமையாக தெரியாது. ஆனால் இயற்கைக்கு மாறான வாழ்க்கை வாழ்ந்து பணியாற்றி வரும் காவல்துறைக்கான ஓய்வு வயதை 55 ஆக நியமித்தால் நல்லது என்று நினைக்கிறோம். கடைசி 5 வருடத்திற்கு குடும்பத்தோடு இயல்பான வாழ்க்கை வாழ்ந்து விட்டு போகிறோம். அப்போதாவது, பணியில் உள்ள போதே இறக்கும் நிலை மாறட்டும்.ஒரே ஒரு ஐஜி இருந்த நிலையில் 100 மடங்கு அதிகாரிகள் பதவியிடம் அதிகரித்து 400 உயரதிகாரிகள் இருக்கின்றனர்.. ஆனால் கீழ்மட்ட அதிகாரிகள் காவலர்கள் பணியிடம் ஐந்து சதவிகிதம் கூட உயரவில்லை.

### எங்களுக்கும் குழந்தைகள், குடும்பம் இருக்கின்றது

மக்களுக்காக பணியாற்றும் காவல் பணியாளர்கள் எண்ணிக்கையை உயர்த்தாமல் ,வேலை வாங்கும் குளிர் சாதன அறை அதிகாரிகளை அதிகரித்து என்ன பயன்?. காவலர்களின் துயரை போக்கவும் நியாயமான கோரிக்கைகளை கேட்டுப் பெறவும் சட்ட அமைப்பு உருவாக வேண்டும். இல்லை என்றால் மாதந்தோறும் காவலர்கள் மடிந்து கொண்டே இருப்பதை தவிர்க்க முடியாமல் போய்விடும். அனாதை பிள்ளை மீது அனைவரும் அன்பு செலுத்துவது போல்... கேட்பதற்கு எந்த அமைப்பும் இல்லாமல் இருக்கும் காவல்துறையின் குறைகளை களைய ஜனநாயக காவலர்கள் முன் வரட்டும்.
மக்கள் நிம்மதியாக தூங்க 24 மணி நேரமும்,விழித்துக் கொண்டு பணியாற்றிக் கொண்டிருக்கும் காவல் ஆய்வாளர்கள் முதல் காவலர்கள் வரையிலானவர்களை இறுதி முடிவில் தள்ளும் அளவிற்கு தயவு செய்து தள்ளிவிடாதீர்கள்.பெண் காவலர் உட்பட போக்குவரத்து பணியில் , வெயிலில் வெந்தும், மழையில் நனைந்தும் பணியாற்றும் எங்களுக்கும், குழந்தைகள் இருக்கிறார்கள், குடும்பம் இருக்கிறது என்பதை மட்டும் தயவு செய்து உணருங்கள். இதில் பெண் காவலர்கள் சக அதிகாரிகளின் காமக் கண்களில் சிக்கி சீரழிவது வேறு.

### புதிய விடியலுக்காக காத்துக் கொண்டிருக்கிறோம்



இது என் குரல் மட்டுமல்ல என் போன்று பாதிக்கப்பட்டு, மெல்லவும் முடியாமல், சொல்லவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கானோரின் அவலக்குரல், சம்பந்தப்பட்டவர்கள் காதில் விழுமா ? எங்கள் நியாயமான கோரிக்கை நிறைவேறுமா? என்று ஏக்கத்துடன் சம்பந்தப்பட்டவர்களின்பதிலை எதிர்பார்த்து ஒரு புதிய விடியலுக்காக, காத்துக் கொண்டிருக்கிறோம் பரிதாபத்துக்குரிய நாங்கள்.எங்கள் கனவு கானல் நீராகிவிடுமா?
மீண்டும் சொல்கிறேன். இது என் போன்றவர்களின் வருத்தத்தின் வெளிப்பாடான அபயக்குரல். யார் மனதையும் புண்படுத்தும் ஆபத்து குரலல்ல.




சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று, அமைச்சர் பொன்முடி எழுதிய 'திராவிட இயக்கமும், கருப்பர் இயக்கமும்' நூலின் முதல் பிரதியை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெ ளியிட, தி.க. தலைவர் கி.வீரமணி பெற்றுக்கொண்டார். அருகில் அமைச்சர் துரை முருகன், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நூலாசிரியர் அமைச்சர் பொன்முடி, நூல் மொழிபெயர்ப்பாளர் அசதா, பதிப்பாளர் சுபகுணராஜன். ஆகியோர் உள்ளனர்.

## கேரள மாநிலம்

# திருச்சூரில் 108 கிலோ தங்கம் பறிமுதல்!

திருச்சூர், அக்.26–
கேரள மாநிலம் திருச்சூரில் வியாபார கடைகளில் நடத்தப்பட்ட திடீர் சோதனையில் கணக்கில் காட்டப்படாத 108 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.
இந்தியாவில் இறக்குமதி செய்யப்படும் தங்கத்தில் 20 சதவீதம் கேரள மாநிலத்துக்கு செல்கிறது. கேரளாவில் கடந்தாண்டு சுமார் 150 டன் தங்கம் விற்பனை செய்யப்பட்டுள்ளது. ஆனால் அரசுக்கு செலுத்தப்பட்ட ஜிஎஸ்டி வரியை கணக்கிட்டால், குறைந்த அளவில் இருந்தது. கணக்கில் காட்டப்படாமல் தங்கம் விற்பனை செய்வது அதிகளவில் நடைபெறுவது தெரியவந்தது. இது குறித்த உளவுத் தகவலை கேரள ஜிஎஸ்டி உளவுத்துறை துணை ஆணையர் தினேஷ் குமார் கடந்த 7 மாதங்களாக சேகரித்தார்.
கணக்கில் காட்டப்படாத தங்கம் அதிகளவில் விற்பனையாவதால், திருச்சூரில் தங்க நகை உற்பத்தி செய்யப்படும் இடங்கள், தங்கம் மொத்தமாக விற்பனை செய்யும் கடைகளில் ஒரே நேரத்தில் மிகப் பெரியளவில் சோதனை நடத்த முடிவு செய்யப்பட்டது.
இத்திட்டம் உயர் அதிகாரிகள் 6 பேருக்கு மட்டுமே தெரியும். இந்த சோதனையை ரகசியமாக நடத்த முடிவு செய்யப்பட்டது. இந்த ஆபரேஷனுக்கு தங்க கோபுரம் என பெயரிடப்பட்டது. கேரளாவின் பல மாவட்டங்களில் இருந்து 700க்கும் மேற்பட்ட வரித்துறை அதிகாரிகள் திருச்சூருக்கு பயிற்சிக்கு வரும்படி அழைக்கப்பட்டனர்.
இவர்களை வைத்து கடந்த புதன்கிழமை மாலை 4.30 மணி முதல் வியாழன் காலை 11 மணி வரை தங்க நகை உற்பத்தி செய்யும் இடங்கள், மொத்த வியாபாரம் நடைபெறும் இடங்கள் என 78 இடங்களில் திடீர் சோதனை நடத்தப்பட்டது. கேரளாவில் மிகப் பெரியளவில்இதுபோன்ற சோதனை நடத்தப்பட்டது இதுவே முதல் முறை. இதில் கணக்கில் காட்டப்படாத 108 கிலோ தங்கம் பறிமுதல் செய்யப்பட்டது.
பல கடைகளில் சோதனை நடந்து கொண்டிருந்தபோது, சில ஊழியர்கள் தங்கத்துடன் தப்பி ஓட முயன்றனர். அவர்களை வரி அதிகாரிகள் விரட்டி பிடித்தனர். ஒருவர் 6.5 கிலோ தங்கத்தை எடுத்துக் கொண்ட தப்ப முயன்றார். கடை உரிமையாளர்களிடம் நடத்திய விசாரணையில் ரூ.1,200 கோடி அளவிலான விற்பனையை கணக்கில் காட்டாமல் மேற்கொண்டதை ஒப்புக் கொண்டனர். இவர்கள் கடந்த 5 ஆண்டுகளாக கணக்கில் காட்டாமல் மேற்கொண்ட தங்க விற்பனை விவரங்கள் குறித்து கேரள ஜிஎஸ்டி அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.
பறிமுதல் செய்யப்பட்ட 108 கிலோ தங்கம் அரசு கருவூலத்துக்கு மாற்றப்படவுள்ளது. கணக்கில் காட்டப்படாத தங்கத்துக்கு 3 சதவீத ஜிஎஸ்டி தொகை , 3 சதவீதம் அபராதம் மற்றும் வட்டி செலுத்திய பின்பே பறிமுதல் செய்யப்பட்ட தங்கம் உரிமையாளர்களிடம் மீண்டும் வழங்கப்படும் என கேரள ஜிஎஸடி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சிலநிறுவனங்களிடம் இருந்து ஏற்கனவே பறிமுதல் செய்யப்பட்ட தங்கத்துக்கு ஜிஎஸ்டி அதிகாரிகள்ரூ.5.5கோடிஅபராதம் வசூதலித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## செம்மொழி நிலையம் சார்பில்


# பள்ளி,கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரைப் போட்டிகள்!

சென்னை,அக்.26–
தாய்மொழியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குகவிதை, கட்டுரை போட்டிகள் நடத்தப்படவுள்ளதாக மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் அறிவித்துள்ளது.
ஒவ்வொரு பிரிவிலும் முதல் 3 இடங்களை பெறுவோருக்கு முறையே ரூ.30 ஆயிரம், ரூ.20 ஆயிரம், ரூ.10 ஆயிரம் என ரொக்கப் பரிசுகள் வழங்கப்படவுள்ளன.
இதுதொடர்பாக மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தின் இயக்குநர் இரா.சந்திரசேகரன் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியதாவது–
மத்திய கல்வி அமைச்சகத்தின் வழிகாட்டுதலின் பேரில் மத்திய செம்மொழி தமிழாய்வு நிறுவனம் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்குகவிதை, கட்டுரை போட்டி களை நடத்தவுள்ளது. கட்டுரைகளும், கவிதைகளும் தமிழின் தொன்மை, தனித்தன்மை, மரபு தொடர்ச்சி ஆகியவற்றைவெளிப்படுத்தும்வகையில்அமைந்திருக்க வேண்டும்.
6 முதல் 9ஆம் வகுப்பு வரை –பாருக்குள்ளே நல்ல நாடு, நம் பாரத நாடு; 10 முதல் பிளஸ் 2 வகுப்பு வரை தீதும் நன்றும் பிறர் தர வாரா; கல்லூரி மாணவர்களுக்கு வள்ளுவர் உணர்த்தும் அறம்.
6 முதல் 9 ஆம் வகுப்பு வரை மெய்ப்பொருள்; 10 முதல் பிளஸ் 2 வகுப்பு வரை செவிச்செல்வம்; கல்லூரி மாணவர்களுக்கு பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்.
விதிமுறைகள்: போட்டியில் பள்ளி, கல்லூரி மாணவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும். கட்டுரை10 பக்கங்களுக்கும், கவிதை 30 அடிகளுக்கும் மிகாமல் இருக்கவேண்டும். தட்டச்சு செய்யாமல் சொந்த கையெழுத்து படியாக இருக்க வேண்டும்.
படைப்புகளை பள்ளி முதல்வர் அல்லது கல்லூரியின் முதல்வர் ஒப்புதலுடன் அனுப்ப வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் தலா 3 பரிசுகள் வழங்கப்படும்.
முதல் பரிசு ரூ.30 ஆயிரம், இரண்டாம் பரிசு ரூ.20 ஆயிரம், மூன்றாம் பரிசு ரூ.10 ஆயிரம் வழங்கப்படும்.
மாணவர்கள் தங்கள் படைப்புகளை, 'இயக்குநர், மத்திய செம் மொழி தமிழாய்வு நிறுவனம், செம்மொழிச்சாலை, பெரும்பாக்கம்,சென்னை 600100' என்ற முகவரிக்கு நவ. 23–ஆம் தேதிக்குள் அனுப்ப வேண்டும்.
இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாப்பிரெட்டிபட்டி அரசு பள்ளியில் தீ தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி!

பாப்பிரெட்டிப்பட்டி அக்.26–
பாப்பிரெட்டிப்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் வெள்ளம் புயல் உள்ளிட்ட இயற்கை இடர்பாடுகளை எதிர்கொள்ளுதல் மற்றும் விபத்தில்லாதீபாவளியை கொண்டாடுவது குறித்து தீ தடுப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது இந்த நிகழ்ச்சிக்கு பள்ளி தலைமை ஆசிரியர் அப்துல் அஜீஸ் தலைமை தாங்கினார் பாப்பிரெட்டிபட்டி தீயணைப்பு நிலைய அலுவலர் பூபதி தலைமையிலானதீயணைப்பு படையினர் இயற்கை இடர்பாடுகளை எதிர்கொளளும் விதம் தீயை அணைப்பது தீ விபத்தில் சிக்கியவர்களை மீட்டு முதலுதவி அளிப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மழைக்காலங்களில் இடர்பாடுகள் ஏற்பட்டால் எவ்வாறு காப்பாற்றுவது என்பது குறித்து செயல் விளக்கம் தீயணைப்பு படையினரால் செய்து காண்பிக்கப்பட்டது இதில் பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.





தொடர்மழை காரணமாக கிருஷ்ணகிரி அணையிலிந்து 6516 கன அடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் 10–வது நாளாக தொடர்ந்து 3 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மாநாட்டில் குவியத் தயாராகும்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

நுட்பங்கள் எளிதாக செல்லும் வகையில் தனியார் கம்பெனியின் செல்போன் டவர் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாநாட்டில் நேற்று இறுதி கட்ட பணிகளாக மாற்றுத்திறனாளிகள் அமர தனி இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாநாட்டு நிகழ்வுகளை பார்வையாளர்கள் பார்க்கின்ற வகையில் 600 பெரிய எல்.இ.டி. திரைகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டு வருகின்றன.

மாநாட்டு முகப்பு கோட்டை மதில் சுவர் வடிவில் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் தொடர்ச்சியாக மாமன்னன் ராஜராஜ சோழன், மாவீரன் தீரன் சின்னமலை, மன்னர் புலித்தேவன், மாவீரர் மருது சகோதரர்கள், மாவீரன் ஒண்டிவீரன், மாமன்னர் பெரும்பிடுகு முத்தரையர், வீரமங்கை வேலுநாச்சியார், மாவீரன் அழகு முத்துக்கோன், மாவீரன் வீரபாண்டிய கட்டபொம்மன், மாவீரன் சுந்தரலிங்கம் ஆகியோரின் புகைப்படம் இடம்பெறுகின்றன. ஏற்கனவே மாநாட்டு மேடைக்கு இடதுபுறம் சட்டமேதை அம்பேத்கர், தந்தை பெரியார், பெருந்தலைவர் காமராஜர் கட்–அவுட்களுடன் விஜய் கட்–அவுட்டும் அமைக்கப்பட்டுள்ளது.

மாநாட்டுக்கு வரும் தொண்டர்களுக்கு வழங்க 3 லட்சம் வாட்டர்பாட்டில் நேற்று வரை இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் பிஸ்கட் பாக்கெட்டுகள் மிச்சர் பாக்கெட்டுகள் என வரவழைத்து அப்பகுதியில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் இருப்பு வைத்துள்ளனர்.

மேலும் மாநாட்டிற்கு இளைஞர்கள், பெண்கள், கல்லூரி மாணவ, மாணவிகள், கட்சித் தொண்டர்கள் என 2 லட்சம் பேர் வரை வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே அதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளை போலீசார் செய்து வருகின்றனர்.

இந்நிலையில் விக்கிரவாண்டி அடுத்த சித்தணி இ.எஸ். கல்லூரியில் மாநாட்டு பாதுகாப்பு பணிகள் குறித்து வடக்கு மண்டல ஐ.ஜி. அஸ்ரா கார்க் தலைமையில் விழுப்புரம் சரக டி.ஐ.ஜி. உயர்மட்ட அளவிலான ஆலோசனைக் கூட்டம் நடந்தது.

மாநாட்டில் வரும் தொண்டர்களுக்கு உணவு வழங்க சமையல் கலைஞர்கள் குழுவினர்கள் வி. சாலையில் உள்ள திருமண மண்டபத்திற்கு வந்திறங்கினர். மாவட்ட நிர்வாகிகள் மாநாட்டு பணிக்காக ஒரு நாள் முன்னதாகவே தாங்கள் ஏற்கனவே புக் செய்த ஓட்டல் அறைகளில் வந்து தங்க ஆரம்பித்தனர். நாளை மாநாடு நடைபெறுவதை யொட்டி விஜய் கட்சியின் தொண்டர்களும், அவரது ரசிகர்களும் தீவிர உற்சாகத்தில் உள்ளனர். தமிழகம் முழுவதிலும் இருந்து மாநாடு நடைபெறும் விக்கிரவாண்டியில் உள்ள வி. சாலைக்கு புறப்பட தயாராக உள்ளனர். ஆங்காங்கே வேன்கள், பேருந்துகள் உள்ளிட்ட ஏராளமான வாகனங்கள் தயார் நிலையில் உள்ளன.

தற்போது மழை காலம் தொடங்கிவிட்டது. இதனால் அவ்வப்போது மழை பெய்து வருகிறது. நாளை மாநாடு நடைபெறும் நிலையில் மழையினால் இடையூறு ஏதும் ஏற்படக்கூடாது என அக்கட்சியினர் கருதுகின்றனர். எனவே மாநாடு நடைபெறும் இடத்தில் தினசரி மாலை அகல் விளக்குகள் ஏற்றி பிரார்த்தனை செய்யப்பட்டு வருகிறது. வி. சாலை கிராமத்தைச் சேர்ந்த 3 சிறுவர், சிறுமிகள் இதற்கான பிரார்த்தனையில் கடந்த 14–ஆம் தேதி முதல் ஈடுபட்டு வருகின்றனர். மேலும் மாநாட்டுக்கு விக்கிரவாண்டி பகுதியைச் சுற்றியுள்ள கிராமங்களில் இருந்து ஏராளமான மக்கள் திரண்டு வந்து கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இவர்கள் தற்போது அங்கு பிரம்மாண்டமாக நடைபெறும் மாநாட்டு பணிகளை கூட்டம் கூட்டமாக வந்து பார்த்துச் செல்கின்றனர். இந்த மாநாடு அப்பகுதி மக்களுக்கு ஒரு திருவிழா கொண்டாட்டத்தை ஏற்படுத்தி உள்ளது.

# 20 கிலோ தங்கக் கட்டிகளை...

1–ம் பக்கத் தொடர்ச்சி

பிரிவு தலைவர் கோவர்தன் ஆகியோரிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்தநிலையில், புதுச்சேரி மாநில பா.ஜ.க தலைவரும், எம்.பி.யுமான செல்வகணபதி, சென்னை சவுகார்பேட்டையைச் சேர்ந்த தொழிலதிபர் பங்கஜ்லால் வாணி மற்றும் என்.எஸ்.சி.போஸ்சாலையைச் சேர்ந்த சூரஜ் ஆகிய மூன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு சி.பி.சி.ஐ.டி போலீசார் சம்மன் அனுப்பினர். அதில், பங்கஜ்லால் வாணி, சூரஜ் ஆகிய இருவரிடமும் நேற்று காலை 1 மணிக்கு விசாரணை நடைபெற்றது. இதில் 4 கோடி ரூபாய் பண பரிமாற்ற விவகாரத்தில், பங்கஜ் லால்வாணிக்கு தொடர்பு இல்லை என தெரியவந்துள்ளது. ஹவாலா பண பரிமாற்றம் மற்றும் பில் இல்லாமல் தங்க கட்டிகளை வாங்கி விற்பனை செய்யும் சூரஜ்க்கு தொடர்பு இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக சி.பி.சி.ஐ.டி போலீஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

அவரிடம் நடத்திய முதற்கட்ட விசாரணையில், ஒரு கோடி ரூபாய் வரை பண பரிமாற்றம் செய்து கொடுத்தேன் என முதலில் போலீசாரிடம் தெரிவித்துள்ளார். தொடர்ந்து, போலீசார் துருவி, துருவி விசாரிக்கவே தங்கக் கட்டிகளை விற்று சட்ட விரோத பண பரிமாற்றத்தில் ஈடுபட்டதை ஒப்புக் கொண்டுள்ளார்.

புதுச்சேரி எம்.பி செல்வகணபதி தன்னைதொடர்பு கொண்டு 20 கிலோ தங்க கட்டிகள் இருப்பதாகவும், அதை விற்றுத் தருமாறு கூறியதாகவும் சூரஜ் வாக்குமூலம் அளித்துள்ளதாக கூறப்படுகிறது. அதன் பேரில் 15 கிலோ தங்க கட்டிகளை சென்னை சவுகார் பேட்டை, என்.எஸ்.சி போஸ் சாலையில் உள்ள நகைக்கடைகளில் விற்றுக்கொடுத்ததாகவும் தெரிய வந்துள்ளது.

மீதி நகையை அவர்கள் புதுச்சேரியிலேயே விற்பனை செய்து விட்டதாகவும் சூரஜ் தெரிவித்ததாக சி.பி.சி.ஐ.டி போலீசார் தெரிவித்துள்ளனர். தேர்தல் செலவுக்காக தான் தங்க கட்டிகளை விற்றுக்கொடுத்தேன் என்று வாக்குமூலம் அளித்துள்ளார். இது மட்டுமின்றி தமிழக பா.ஜ.க நிர்வாகி கோவர்தனின் டிரைவர் விக்னேஷிடமும், சூரஜ் செல்போனில் அடிக்கடி பேசியது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் சி.பி.சி.ஐ.டி தரப்பில் கூறப்படுகிறது.

இதற்கிடையில், புதுச்சேரிஎம்.பிசெல்வகணபதி முழங்காலில் அறுவை சிகிச்சை செய்துள்ளதால் நேரில் ஆஜராக 3 மாதம் அவகாசம் வேண்டும் என்று கடிதம் எழுதியிருந்தார்.இதனைத்தொடர்ந்து, புதுச்சேரிக்கு சென்று செல்வகணபதியிடம் சி.பி.சி.ஐ.டி போலீசார் நேரில் விசாரணை நடத்த முடிவு செய்துள்ளனர். மேலும், சூரஜூடன் தொடர்பில் இருந்த மேலும் சிலருக்கு சம்மன் அனுப்பி விசாரிக்க சி.பி.சி.ஐ.டி. போலீசார் முடிவு செய்துள்ளனர்.



இலக்கியம்பட்டி ஊராட்சியை தர்மபுரி நகராட்சியுடன் இணைக்க எதிர்ப்பு தெரிவித்து தர்மபுரி ஆட்சியர் அலுவலகம் அருகே அ.தி.மு.க சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தது. இதில் எம்.எல்.ஏ.க்கள் கே.பி.அன்பழகன், கோவிந்தசமி உள்பட பலர் பங்கேற்றனர்.

### மதுரையில் 10 செ.மீ. மழை பெய்தது:

# தெருக்களில் வெள்ளபெருக்கு; வீடுகளில் தண்ணீர் புகுந்தது!

## வடக்கு, கிழக்கு தாலுகாக்களில் பள்ளிகளுக்கு இன்று விடுமுறை!!

மதுரை, அக்.26–

வங்கக்கடலில் உருவான புயல் காரணமாக தமிழ்நாட்டில் பல இடங்களில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்தநிலையில் தெற்கு கேரள கடற்கரையையொட்டி தென்கிழக்கு அரபிக்கடல் பகுதிகளில் மேல்நிலவும் கீழடுக்கு சுழற்சி காரணமாக மேலும் மழைக்கான வாய்ப்பு இருப்பதாக வானிலை மையம் தெரிவித்துள்ளது. அதன்படி தென்மாவட்டங்களில் மதுரை, தேனி, திண்டு க்கல், தென்காசி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, சிவகங்கை, ராமநாதபுரம், விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது.

மதுரையில் கடந்த 2 நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினமும், நேற்றும் பலத்த மழை பெய்தது. மதுரை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் பலத்த மழை பெய்து வருகிறது. இந்த மழையால் தாழ்வான பகுதிகளில் மழை நீர் குளம்போல் தேங்கியது. மதுரை நகர் பகுதிகளான செல்லூர், புதூர், ஆணையூர், வில்லாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் வீடுகளுக்குள் மழை நீர் புகுந்தது. இதனால் பொதுமக்கள் கடும் அவதிப்பட்டனர். நேற்று மதியம் 3 மணி முதல் மாலை 6 மணி வரை பல்வேறு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. புறநகர் பகுதிகளில் 3 மணி முதல் 4 மணி வரை மழை பெய்தது. மதுரை நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் 45 மி.மீ. மழை பதிவாகி இருந்தது. காலை முதல் மாலை வரை 100 மி.மீ. மழை பதிவு இருந்தது. மதுரை டி.ஆர்.ஓ.காலனி மற்றும் கலை நகர் பகுதிகளில் மரம் முறிந்து விழுந்தது.

இந்த மழையால் செல்லூர் கண்மாயில் நீர்வரத்து அதிகரித்து. விஸ்வநாதபுரம், மகாத்மா காந்தி சாலையில் தண்ணீர் தேங்கி நின்றது. செல்லூர் 50 அடி பகுதிகளில் உள்ள வீடுகளில் மழை தண்ணீர் புகுந்தது. இதேபோல் சுயராஜ்யபுரம், ஒளவையார் தெரு, வாஞ்சிநாதன் தெரு, சத்யமூர்த்தி தெரு, கூடல்நகர், மகாத்மா காந்தி நகர், காந்திபுரம், ஆத்திகுளம், ரிசர்வ் லைன், திருப்பாலை, கலைநகர், கட்டபொம்மன் தெரு, பிரசாத் தெரு பகுதிகளில் உள்ள தெருக்களில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. வீடுகளில் வெள்ளம் புகுந்தது. மதுரை– தேனி சாலையில் உள்ள விராட்டிபத்து, எச்.எம்.எஸ்.நகர், ஒத்தக்கடை காந்திநகர், அய்யப்ப நகர், நீதிநகர், பீ.பீ. குளத்திற்கு உட்பட்ட அய்யர்பங்களா சாலை, பார்க்டவுன் பகுதிகளில் உள்ள தெருக்களில் இடுப்பளவிற்கு தண்ணீர் தேங்கியது. கிருஷ்ணாபுரம் காலனி பகுதிகளில் மழை நீருடன் கழிவு நீரும் கலந்து சாலைகளில் தேங்கியது. இதேபோல், வில்லாபுரம் ஹவுசிங் போர்ட் பகுதிகளில் மழை நீருடன் சாக்கடை கலந்து சென்றது.

மதுரை கோரிப்பாளையத்தில் மேம்பாலம் அமைக்கும் பணி நடந்து வருகிறது. இதனால் போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளபாலம்ஸ்டேசன் சாலை, தமிழ்சங்கம் சாலை உள்ளிட்ட பகுதிகளில் மழைநீர் சூழ்ந்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. ஒத்தக்கடை அருகே பெய்த மழையால் ஐகோர்ட்டில் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது.

மதுரையில் கனமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டார். அதன்படி அமைச்சர்கள் மூர்த்தி, பழனிவேல் தியாகராஜன், கலெக்டர் சங்கீதா, மாநகராட்சி கமிஷனர் தினேஷ்குமார், மேயர் இந்திராணி மற்றும் அதிகாரிகள் வெள்ளம் பாதித்த பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டனர். அங்கு சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டனர்.

மதுரை மாநகராட்சி பகுதிகளுக்குள் மழையால் ஏற்படும் இடர்பாடுகளை தடுக்க தற்போது முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட மக்கள் தங்குவதற்கான வசதிகள், உணவுகள், மாவட்ட நிர்வாகம் சார்பிலும், மாநகராட்சி சார்பிலும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வடிகாலில் மழைநீர் தங்குதடையின்றி செல்வதற்கு செல்ல அதிகாரிகள்கண்காணித்து வருகின்றன. முல்லை நகர்பகுதியில்உள்ளமேல் நிலைப்பள்ளியில் 100–க்கும் மேற்பட்ட பொது மக்கள், குழந்தைகள் பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். முல்லைநகரில் தேங்கிய மழை நீரைபீ.பீ.குளம்கால்வாய், சின்னசொக்கிகுளம் கால்வாய் வழியாக உலகதமிழ் சங்கம் எதிரே உள்ள கரும்பாலை வழியாக வைகை ஆற்றுக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



மதுரை புறநகர் பகுதிகளான உசிலம்பட்டி, தொட்டப்பநாயக்கன் பட்டி, பண்ணைபட்டி, அள்ளிகுண்டம், வெள்ளைமலைபட்டி உள்ளிட்ட பகுதிகளில் நேற்று மாலை கனமழை பெய்தது. இந்த மழையால் அந்த பகுதிகளில் வெள்ள பெருக்கு ஏற்பட்டது. நீர்நிலைகள் உடைந்து ஊருக்குள் புகுந்தது. இதேபோல் கொங்கப்பட்டி பகுதி, குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் புகுந்தது. உசிலம்பட்டி நகர் பகுதிகளான நீராவி மேட்டுத் தெரு பகுதிகளில் வெள்ளம் புகுந்தது.

இந்தமழையால்வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பல்வேறு இடங்களில் தண்ணீரும் தேங்கியுள்ளதால் வடக்கு தாலுகா, கிழக்கு தாலுகாவில் உள்ள பள்ளிகளுக்கு இன்று விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.



காவேரிப்பட்டணம் பேரூராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு பேரூராட்சித் தலைவர் அம்சவேனி செந்தில்குமார் தீபாவளி முன்னிட்டு அனைவருக்கும் புது சீருடை வழங்கினார். மாவட்ட அமைப்பு சாரா துணைத் தலைவர் செந்தில்குமார் மற்றும் கவுன்சிலர்கள் உள்பட பலர் உள்ளனர்.

### வம்பை விலை கொடுத்து வாங்கினார்:

# செல்பி எடுத்த வாலிபரை மிதித்து கொன்ற காட்டு யானை!

## மகாராஷ்டிராவில் அதிர்ச்சி சம்பவம்!!

மும்பை, அக்.26–

வம்பை விலை கொடுத்து வாங்கியது போன்று, நேருக்கு நேர் சென்று காட்டு யானையுடன் வாலிபர் செல்பி எடுத்தார். அவரை காட்டு யானை கொடூரமாக மிதித்து கொன்றது.

மகாராஷ்டிராவில் நடந்த இந்த அதிர்ச்சி சம்பவம் விவரம் வருமாறு:–

மகாராஷ்டிரா மாநிலத்தில் கட்சிரோலியில் உள்ள அபாபூர் வனப்பகுதியில் ஸ்ரீகாந்த் என்பவர் நண்பர்களுடன் சேர்ந்து காட்டு யானையுடன் செல்பி எடுக்க ஆசைப்பட்டுள்ளார். இதற்காக அவர்கள் காட்டு யானை வருவதை அறிந்து தூரத்தில் நின்று செல்பி எடுக்க முயன்றனர். ஆனால் காட்டு யானையோ அவர்களை விரட்டியது. இதில் 23 வயதான ஸ்ரீகாந்தைதூக்கிபோட்டு மிதித்து கொன்றது. மற்ற இருவர் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பினர்.

ஸ்ரீகாந்த் மற்றும் நண்பர்கள் ஆகிய மூவரும் கட்சிரோலி மாவட்டத்தில் கேபிள் பதிக்கும் பணிக்காக நவேகானில் இருந்து வந்துள்ளனர். அப்போது அவர்களுக்கு கட்சிரோலி வனப்பகுதியில் இருந்து காட்டு யானை ஒன்று வெளியே வருவதாக தகவல் கிடைத்தது. இதையடுத்தே இவர்களுக்கு காட்டுயானையுடன் செல்பி எடுக்க வேண்டும் என்ற ஆசை வந்துள்ளது. அதுவே அவரின் உயிருக்கு எமனாக மாறியது. தொடக்கத்தில் தூரத்தில் இருந்த காட்டு யானை இவர்களை பார்த்ததும் வெறி கொண்டு ஆக்ரோஷமாக ஓடி வந்தது. இதை அருகில் வந்த பிறகுதான் இவர்கள் பார்த்துள்ளனர். அதைத் தொடர்ந்து இவர்கள் அனைவரும் ஓட்டம் பிடித்துள்ளனர்.

அவர்களில் ஸ்ரீகாந்த் மட்டும் யானையிடம் சிக்கிக்கொண்டார். அவரை தனது தும்பிக்கையால் லாவகமாக சுற்றிப் பிடித்து தூக்கிய யானை தனது காலில் போட்டு கொடூரமாக மிதித்து கொன்றுள்ளது.


**அகரம் (முதல்நிலை) பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்**
**நபார்டு நிதி உதவி திட்டம் (RIDF XXVIII) 2024-25**

ந.க.எண்.145/2024 — **ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை** — நாள்: 18.10.2024

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | செலுத்த வேண்டிய தொகை: முன் வைப்புத் தொகை (ரூபாயில்) 1 சதவீதம் | செலுத்த வேண்டிய தொகை: ஒப்பந்தப்புள்ளி படிவம் விலை வரியுடன் | ஒப்பந்த– தாரரிகள் தகுதி | வேலையை செய்து முடிக்க வேண்டிய காலம் (வேலை உத்தரவு தேதி முதல்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | அகரம் பேரூராட்சி 6வது என்.எச்–7 முதல் காமாட்சிபுரம் காலனி வரை தடுப்புச்சுவர் மற்றும் சிறுபாலத்துடன் கூடிய தார்சாலை அமைத்தல் | 115.00 | 1,15,000/- | 17700 | Class I | 12 மாதங்கள் |

அகரம் முதல்நிலை பேரூராட்சி 2024–25–ம் ஆண்டு தமிழ்நாடு நபார்டு நிதி உதவி திட்டம் (RIDF XXVIII) திட்டத்தில் மேற்கண்ட பணியினை மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து இரண்டு உறைகள் (Two cover system) கொண்ட மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன அகரம் முதல்நிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் (அ) அவரால் அங்கீகரிக்கப்பட்டவரால் **07.11.2024 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை** பெற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் **அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்கு** அப்போது வருகை தந்துள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் பரிசீலிக்கப்படும். 1. ஒப்பந்தப்புள்ளி சம்மந்தப்பட்ட நிபந்தனைகளை அகரம் முதல்நிலை பேரூராட்சி அலுவலகத்தில், அலுவலக வேலை நாட்களில், அலுவலக வேலை நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். 2. ஒப்பந்தப்புள்ளி படிவங்களை **07.11.2024 ஆம் தேதி மாலை 3.00 மணிக்குள்** பேரூராட்சி அலுவலகத்தில் தொகை செலுத்தி பெற்றுக் கொள்ளலாம் அல்லது https://tntenders.gov.in என்ற வலைதள முகவரியிலிருந்து இலவசமாக பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

**செயல் அலுவலர்**
அகரம் பேரூராட்சி, திண்டுக்கல் மாவட்டம்

செ.ம.தொ.இ / 4570 / ஒப்பந்தப்புள்ளி / 2024



# TANEJA AEROSPACE AND AVIATION LIMITED

Regd. Office: Belagondapalli Village, Thally Road, Denkanikottai Taluk, Krishnagiri Dist., Belagondapalli - 635114,
Tamil Nadu, India Phone : 04347-233508, Fax : 04347-233414, E-mail : secretarial@taal.co.in,
Website : www.taal.co.in, CIN : L62200TZ1988PLC014460

**EXTRACT OF THE STATEMENT OF CONSOLIDATED FINANCIAL RESULTS FOR THE QUARTER AND HALF YEAR ENDED SEPTEMBER 30, 2024**

(Rs. in Lacs, except earnings per share)

| Sr. No. | Particulars | CONSOLIDATED | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | Quarter Ended | | | Half Year Ended | | Year Ended |
| | | 30-Sep-24 | 30-Jun-24 | 30-Sep-23 | 30-Sep-24 | 30-Sep-23 | 31-Mar-24 |
| | | (Un-Audited) | (Un-Audited) | (Un-Audited) | (Un-Audited) | (Un-Audited) | (Audited) |
| 1 | Total Income from operations (Net) | 1,042.26 | 930.88 | 719.77 | 1,973.14 | 1,492.13 | 3,086.05 |
| 2 | Net Profit / (Loss) for the period (before Tax, Exceptional and/or Extraordinary items) | 597.01 | 422.08 | 390.84 | 1,019.08 | 854.30 | 1,550.25 |
| 3 | Net Profit / (Loss) for the period before tax (after Exceptional and/or Extraordinary Items) | 597.01 | 422.08 | 390.84 | 1,019.08 | 854.30 | 1,550.25 |
| 4 | Net Profit / (Loss) for the period after tax (after Exceptional and/or Extraordinary items) | 409.32 | 346.47 | 266.89 | 755.78 | 610.61 | 1,113.09 |
| 5 | Total Comprehensive Income for the period [Comprising Profit / (Loss) for the period (after tax) and Other Comprehensive Income (after tax)] | 409.32 | 346.47 | 266.89 | 755.78 | 610.61 | 1,082.08 |
| 6 | Equity share capital | 1,275.03 | 1,275.03 | 1,246.54 | 1,275.03 | 1,245.54 | 1,275.03 |
| 7 | Reserves (excluding Revaluation Reserve) as shown in the Audited Balance Sheet of the previous year | - | - | - | | | 11,766.80 |
| 8 | Earnings Per Share (of Rs. 5/- each) (not annualised):<br>(a) Basic earnings / (loss) per share<br>(b) Diluted earnings / (loss) per share | 1.61<br>1.61 | 1.36<br>1.36 | 1.07<br>1.07 | 2.96<br>2.96 | 2.45<br>2.45 | 4.45<br>4.45 |

**Notes :**

1. Additional information on standalone financial results as follows :

| Particulars | Quarter Ended | | | Half Year Ended | | Year Ended |
|---|---|---|---|---|---|---|
| | 30-Sep-24 | 30-Jun-24 | 30-Sep-23 | 30-Sep-24 | 30-Sep-23 | 31-Mar-24 |
| | (Un-Audited) | (Un-Audited) | (Un-Audited) | (Un-Audited) | (Un-Audited) | (Audited) |
| Revenue from Operations | 1011.94 | 914.32 | 714.68 | 1,926.26 | 1,471.28 | 3,035.20 |
| Profit / (Loss) before tax | 597.01 | 422.08 | 390.84 | 1,019.08 | 854.30 | 1550.31 |
| Profit / (Loss) after tax | 409.32 | 346.47 | 266.89 | 755.78 | 610.61 | 1113.15 |

2 The above is an extract of the detailed format of Standalone and Consolidated Financial Results for the quarter ended September 30, 2024 filed with the Stock Exchange under Regulation 33 of the SEBI (Listing Obligations and Disclosure Requirements) Regulations, 2015. The full format of the Standalone and Consolidated Financial Results are available on the Stock Exchange website (www.bseindia.com) and also on the Company's website (www.taal.co.in).

3 This statement has been reviewed by the Audit Committee and approved by the Board of Directors at their respective meetings held on October 25, 2024.

Place: Gurugram
Date : October 25, 2024

**For Taneja Aerospace and Aviation Limited**
**Rakesh Duda**
**Managing Director**



**நாமகிரிப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி**
**நாமக்கல் மாவட்டம்.**

திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் அபராதம் நாமக்கல் மாவட்டம், நாமகிரிப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 18 வார்டு பகுதிகளிலும், பொது மக்கள் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தக்கூடாது என்று விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் சுகாதார சீர்கேடு ஏற்படுவதோடு பல்வேறு தொற்றுநோய்கள் பரவ வாய்ப்புள்ளது. அதனால் பொது மக்கள் பொது கழிப்பிடத்தையோ அல்லது தனிநபர் கழிப்பிடத்தையோ பயன்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதனை பயன்படுத்தாமல் திறந்தவெளி பகுதிகளை கழிப்பிடமாக பயன்படுத்தினால் சிறுநீர் கழித்தமைக்கு ரூ.100/ மற்றும் மலம் கழித்தால் ரூ.500/ம் அபராதம் விதிக்கப்படுவதுடன் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். தற்போது ஒவ்வொரு வார்டும் கண்காணிப்பட்டு வருகிறது. எனவே பொதுமக்கள் பொதுசுகாதார நடவடிக்கையில் பேரூராட்சி நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமாய் இதன் மூலம் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**செயல்அலுவலர்,**
**நாமகிரிப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி,**
**நாமக்கல் மாவட்டம்.**

வெ.ஆ.எண்.139/செ.ம.தொ.அ./நாமக்கல்/நாள்:25.10.2024



# கெலமங்கலம் தேர்வுநிலை பேரூராட்சி

## தூய்மை இந்தியா இயக்கம் அறிவிப்பு

மத்திய வீட்டு வசதி மற்றும் நகர்புற விவகாரத்துறை அமைச்சகம் வகுத்துள்ள நெறிமுறைகளை பின்பற்றி கெலமங்கலம் பேரூராட்சியை திறந்தவெளி கழிப்பிடமற்ற Open Defecation Free plus Town (ODF+) பேரூராட்சியாக அறிவித்திட கெலமங்கலம் பேரூராட்சியின் மன்ற ஒப்புதல் பெற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கெலமங்கலம் பேரூராட்சியை திறந்தவெளி கழிப்பிடமற்ற Open Defecation Free plus Town (ODF+) பேரூராட்சியாக அறிவித்திட தங்கள் மேலான கருத்துருக்கள், ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் ஏதும் இருப்பின் செயல் அலுவலர், கெலமங்கலம் பேரூராட்சி, 7/1, அண்ணா நகர், கெலமங்கலம்–635113 என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது kelamangalamtpkgi@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் 09.11.2024 மாலை 6.00 மணிக்குள் தெரிவிக்கலாம் என இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

செயல் அலுவலர்
கெலமங்கலம் பேரூராட்சி
கிருஷ்ணகிரி மாவட்டம்.

**வெ.ஆ.எண். 84/செ.ம.தொ.அ./ஒ.பு.நாள்:25.10.2024**

## கிருஷ்ணகிரியில்

# அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்!

## கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. பங்கேற்பு!!

கிருஷ்ணகிரி, அக்.26–

கிருஷ்ணகிரியில், கிழக்கு ஒன்றிய அ.தி.மு.க. சார்பில், கட்சியின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் மக்கள் பணிகள் குறித்து செயல்வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது. ஒன்றிய அவைத் தலைவர் அமீர் ஜான் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் கன்னியப்பன் வரவேற்றார். கிழக்கு மாவட்ட செயலாளர் அசோக்குமார் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார்.

இதில் அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. கலந்து கொண்டு ஆலோசனை வழங்கி பேசினார். கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் படித்த மாணவ, மாணவிகளுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கி கொடுத்த ரத்தன் டாடா மறைவிற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வது.

வருகிற 2026–ல் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அ.தி.மு.க., ஆட்சி அமைக்க அயராது உழைக்க வேண்டும். தி.மு.க., அரசை கண்டிப்பது என்பது உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில் மாற்று கட்சியினர் 25 பேர் கே.பி.முனுசாமி முன்னிலையில அ.தி.மு.க.வில் இணைந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் செய்தி தொடர்பாளர் சமரசம், மாவட்ட அவை தலைவர் காத்தவராயன், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் முனி வெங்கடப்பன், மனோரஞ்சிதம் நாகராஜ், இளைஞர், இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே.பி.எம்.சதீஷ்குமார், நகர செயலாளர் கேசவன், முன்னாள் நகராட்சி தலைவர் தங்கமுத்து, மாவட்ட இணை செயலாளர் சாகுல் அமீது, மாவட்ட மருத்துவர்அணிதலைவர்அசோக்குமார், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு தலைவர் ஜெயகுமார் உள்பட பலர்கலந்து கொண்டனர். முடிவில் அமைப்பு சாரா ஓட்டுனர் அணி மாவட்ட செயலாளர் ஆஜி நன்றி கூறினார்.



கிருஷ்ணகிரி கிழக்கு ஒன்றிய அ.தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டத்தில் துணை பொதுச் செயலாளர் கே.பி.முனுசாமி எம்.எல்.ஏ. பேசினார். அருகில் மாவட்ட செயலாளர் அசோக்குமார் எம்.எல்.ஏ. உள்ளார்.

## நீர்பிடிப்பு பகுதிகளில் தொடர்ந்து மழை:

# கிருஷ்ணகிரி அணையில் இருந்து 6,516 கன அடி தண்ணீர் திறப்பு!

## 3 மாவட்டங்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை!!

கிருஷ்ணகிரி,அக்.26–

நீர்பிடிப்பு பகுதிகளில தொடர்ந்து பெய்து வரும் மழை எதிரொலியாக கிருஷ்ணகிரி அணையில் இருந்து 6,516 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதனால் தென்பெண்ணை ஆற்றங்கரையோரத்தில் வசிக்க கூடிய 3 மாவட்ட மக்களுக்கு 10–வது நாளாக வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தென்பெண்ணை ஆற்று நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்த கனமழையால் ஒசூர் கெலவரப்பள்ளி மற்றும் கிருஷ்ணகிரி அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. இந்த நிலையில், கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அருகே கெலவரப்பள்ளி அணைக்கு நேற்று முந்தினம் வினாடிக்கு 4768 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 3200 கனஅடியாக சரிந்தது.

அணையின் மொத்த கொள்ளளவான 44.28 அடியில் நீர்மட்டம் 40.67 அடியாக உள்ளது. அணையில் இருந்து விநாடிக்கு பாசன கால்வாய்கள், ஆற்றிலும் 3200 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி அணைக்கு நீர்வரத்து நேற்று முன்தினம் 6000 கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 6205 கனஅடியாக அதிகரித்தது. அணையின் மொத்த கொள்ளளவான 52 அடியில் நீர்மட்டம் 50.10 அடியாக உள்ளதால், அணையில் இருந்து விநாடிக்கு 6516 கனஅடி தண்ணீர், 3 பிரதான மதகுகள் மற்றும் 3 மணல் போக்கி சிறிய மதகுகள் வழியாக திறக்கப்பட்டுள்ளது. இதனால், தென்பெண்ணை ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேலும், அணை தரைப்பாலத்தை மூழ்கியபடி தண்ணீர் செல்வதால், பூங்காவிற்கு செல்லும் சாலை அடைக்கப்பட்டுள்ளது. அணைக்குள் சுற்றுலா பயணிகள் செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளது. அணைக்கு வரும் சுற்றுலா பயணிகள், தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள உயர்மட்ட பாலத்தில் இருந்து அணையின் நீர் திறப்பை ரசித்து செல்கின்றனர்.

கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை மாவட்டம் சாத்தனூர் வரை 3 மாவட்டங்களில் தென்பெண்ணை ஆற்றங்கரையோரம் வசிக்கும் மக்களுக்கு 10வது நாளாக வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள தாக நீர்வளத்துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

மாவட்டத்தில் நேற்று காலை 8 மணி நிலவரப்படி மழையளவு மில்லி மீட்டரில், ராயக்கோட்டை 28, நெடுங்கல், பாரூரில் தலா 26, தேன்கனிக்கோட்டை 19 பதிவாகி இருந்தது.

வெள்ளிதோறும் மாலைமுரசில்
ராசிபலன்
வெளிவரும்

# பணிபுரியும் பெண்களை பாதுகாக்க குழு அமைக்காவிட்டால் அபராதம்!

## கிருஷ்ணகிரி கலெக்டர் எச்சரிக்கை!!

கிருஷ்ணகிரி, அக். 26–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெண்களை பாதுகாக்க உள்ள குழு அமைக்காவிட்டால் ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும் என கலெக்டர் சரயு தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:–

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் 10க்கும் மேற்பட்ட ஆண், பெண்கள் பணிபுரியும் பணியாளர்கள் உள்ள அனைத்து பணியிடங்களிலும் பாலியல் வன்கொடுமையில் இருந்து பெண்களை பாதுகாக்கும் உள்ள குழு அமைக்க வேண்டும்.

அதன்படி, மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு, தனியார் அலுவலங்கள், கூட்டுறவு துறை சார்ந்த சங்கம், நிறுவனங்கள், கிராம ஊராட்சிகள், பள்ளிகள், கல்லூரிகள், மருத்துவமனைகள், வங்கிகள், போலீஸ் நிலையங்கள், தொழில் நிறுவனங்கள், துணிக்கடைகள், நகைக்கடைகள், வணிகவளாகங்கள், பயிற்சிநிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், தொண்டு நிறுவனங்களில் 10க்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ள இடங்களில் 4 பேர் கொண்ட உள்ளக குழு அமைக்கப்பட வேண்டும்.

இந்த குழுவில் 50 சதவீதம் பெண்கள் இடம் பெற வேண்டும். உள்ளக குழு அமைக்காத அரசு மற்றும் தனியார் அலுவலங்கள், நிறுவனங்கள் மீது ரூ.50 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.

மேலும், குழு அமைக்கப்பட்ட உடன் உறுப்பினர்களின் விவரங்களை மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு வருகிற நவம்பர்மாதம் 16–ந்தேதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும், இக்குழுவின் செயல்பாடுகள் குறித்த நிகழ்வு அறிக்கையினை ஒவ்வொரு ஆண்டும், ஆண்டு அறிக்கையாக மாவட்ட சமூகநல அலுவலகத்திற்கு நேரிலோ அல்லது மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்க வேண்டும். மேலும், விவரங்களுக்கு மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் செயல்படும் சமூக நல அலுவலகம், கிருஷ்ணகிரிஎன்கிறமுகவரியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

Published by S.N.Selvam on behalf of M/s. Chennai Murasu Pvt. Ltd. from Salem Malai Murasu Achagam, K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem- 636004, Tamil Nadu and printed by P.Senthil Azhagan at Salem Malai Murasu Achagam, K-1, SIDCO Industrial Estate, Omalur Main Road, 5 Roads, Salem-636 004, Tamil Nadu. Editor:S.N.Selvam.



அரசுக்கு நிலம் கொடுத்த கூலித்தொழிலாளிக்கு வீடு இல்லாமல் தவித்த முருகேசனுக்கு 18 ஆண்டுகளுக்கு பின் வீட்டுமனை பட்டாவை அமைச்சர் கே.என்.நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் வழங்கினார்.

## 'மாலைமுரசு' செய்தி எதிரொலி:

# வீடு இல்லாமல் தவித்தவருக்கு அரசு வீட்டு மனை பட்டா!

## அமைச்சர்கள் வழங்கினர்!!

பாப்பிரெட்டிப்பட்டி, அக். 26–

தர்மபுரி மாவட்டம் பொம்மிடியை அடுத்த ரேகடஹல்லி ஊராட்சிக்கு உட்பட்ட ஜாலிபுதுரை சேர்ந்தவர் முருகேசன் (63) கூலி தொழிலாளி இவர் கடந்த 2006 ஆம் ஆண்டு ஜாலி புதூரில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி அமைய வேண்டி தனக்கு சொந்தமான 80 சென்ட் விவசாய நிலத்தை தானமாக கொடுத்துள்ளார்.

அப்போது அவருக்கு 5 சென்ட் இடம் வேறு இடத்தில் அரசு சார்பில் கொடுக்கப்படுவதாக அதிகாரிகள் உறுதி அளித்து இருந்தனர், ஆனால் இதுவரை அவருக்கு இடம் வழங்கவில்லை இது குறித்து அவர் கடந்த 18 ஆண்டுகளாக அதிகாரிகளிடம் கோரிக்கை மனுக்கள் அளித்தும் மாவட்ட நிர்வாகம் எந்த வித நடவடிக்கையும் எடுக்கவில்லை இது குறித்து முருகேசன் கூறும் போது கிராமத்தில் அரசு மேல்நிலை பள்ளி துவங்க என்னிடமிருந்து 80 சென்ட் நிலத்தையும் தானமாக கொடுத்தேன் அப்போது அதிகாரிகள் வேறு இடத்தில் உங்களுக்கு ஐந்து ஏக்கர் நிலத்தை கொடுப்பதாக உறுதி கூறினர் தன்னிடமிருந்து நிலத்தை தானமாக பெற்றதாகவும், ஆனால் இதுவரை தனக்கு இடம் வழங்கவில்லை எனவும்

அவர் கடந்த 18 ஆண்டுகளாக இருக்க இடம் இன்றி ஆங்காங்கே தங்கி ஜீவாதாரம் நடத்தி வந்ததாகவும், வீடு இல்லாததால் தனக்கு திருமணமும் ஆகவில்லை என வேதனையுடன் தெரிவித்தார்.

தன்னிடம்இருந்த நிலத்தையும்தானமாக கொடுத்துவிட்டு தற்போது தனக்கு இடம் இன்றி மிகவும் சிரமப்பட்டு வருவதாகவும் தமிழக அரசு தனக்கு வீட்டு மனை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கோரிக்கைவிடுத்தார்.

இந்த செய்தி கடந்த 18ஆம் தேதி அன்று மாலை முரசு நாளிதழில் செய்தி வெளியானது.

இதை தொடர்ந்து தருமபுரி மாவட்ட நிர்வாகம் மேற்கொண்ட துரித நடவடிக்கையை தொடங்கு பாப்பிரெட்டிப்பட்டி வட்டாட்சியர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் ஆகியோர் ஆய்வு செய்து அவருக்கு இடம் வழங்க முடிவு செய்தனர்.

இதைத்தொடர்ந்துகடந்த 241024 (வியாழக்கிழமை) அன்று அரூரில் நடைபெற்ற பேருந்து நிலைய திறப்ப விழா நிகழ்ச்சியில் தமிழக உள்ளாட்சித் துறை மற்றும் குடிநீர் வழங்கள் துறை அமைச்சர் கே என் நேரு மற்றும் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம் ஆர் கே பன்னீர்செல்வம் ஆகியோர் பங்கேற்ற அரசு விழாவில் கூலித் தொழிலாளி முருகேசனுக்கு வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டுள்ளது .

தனக்கு வீட்டுமனை பட்டா வழங்கிய தமிழக அரசுக்கும் மாவட்ட நிர்வாகத்திற்கும் கூலித் தொழிலாளி முருகேசன் நன்றி தெரிவித்துள்ளார்.

## கோழித்தீவன மூட்டைகள் சரிந்து விழுந்தது:

# விளையாடிய 2 பெண் குழந்தைகள் பரிதாப சாவு!

## உருக்கமான தகவல்கள்!!

கிருஷ்ணகிரி, அக்.26–

கோழிப்பண்ணையில் விளையாடிய போது தீவன மூடைகள் சரிந்து விழுந்து 2 பெண் குழந்தைகள் இறந்தனர்.

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக் கோட்டை தாலுகா தளி அருகே உள்ள கும்ம ளாபுரம்ஊராட்சி கோபசந்திரம் கிராமத்தை சேர்ந்தவர் ரவிகுமார் (வயது42). இவர் கோழிப் பண்ணை வைத்துள்ளார். இதில் பீகார் மாநி லம் சீதாமரி மாவட்டம், பேளபாரிக்கா கிரா மத்தைசேர்ந்த முகமது ஜகாவத் (30) என்பவர் மனைவி மற்றும் 2 பெண் குழந்தைகளுடன் அங்கேயே தங்கிவேலை செய்து வந்தார்.

இந்த நிலையில் நேற்று மதியம் முகமது ஜகாவத்தின் குழந்தைகள் சார்பானு (4), ஆயத்காத்தூன் (3) ஆகிய 2 பேரும் கோழிப் பண்ணை அருகே உள்ள தீவன அறையில் விளையாடிகொண்டு இருந்தனர். அப்போது தீவனமூடைகள் திடீ ரென சரிந்து குழந்தைகள் மீது விழுந்தது.

மூடைகள் சரிந்து விழும் சத்தம் கேட்டு முகமது ஜகாவத் மற்றும் அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் விரைந்து வந்து மூட்டைகளை அப்புறப்படுத்தி குழந்தைகளை மீட்க முயன்றனர். ஆனால் அதற்குள் 2 குழந்தை களும் மூச்சு திணறி இறந்து விட்டது தெரிய வந்தது. இந்த சோக சம்பவம் குறித்து போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# எஸ்.எஸ்.எம். பள்ளியில் தேசிய மாணவர் படை துவக்கம்!

குமாரபாளையம், அக். 26–

குமாரபாளையம் அருகே குப்பாண்ட பாளையம் எஸ்.எஸ்.எம். சென்ட்ரல் பள்ளியில் தேசிய மாணவர் படை துவக்கப்பட்டது.

குமாரபாளையம் அருகே குப்பாண்ட பாளையம் எஸ்.எஸ்.எம். சென்ட்ரல் பள்ளியில் தேசிய மாணவர் படை துவக்க விழா நடந்தது. தாளாளர் ரவீந்திரன் தலைமை வகித்தார். முதல்வர் மிராஷ் கரீம் வரவேற்றார். கமாண்டிங் அதிகாரியான கர்னல் தினேஷ் ராஜா, சிறப்பு விருந்தினராக பங்கேற்று, தேசியமாணவர்படையை துவக்கி வைத்தார். கர்னல் தினேஷ் ராஜா பேசியதாவது:



ஒற்றுமை, ஒழுக்கம், மற்றும் சகோதரத்துவத்தை தேசிய மாணவர் படை வலியுறுத்துகிறது. இதில் பயிற்சி பெறுவதால், உடல் உறுதி அடைவத்துடன், கல்வியில் சிறந்து விளங்கவும் புத்துணர்ச்சி ஏற்படுகிறது. இதில் சேர்ந்த மாணவர்கள் அனைவரும் தவறாமல் தீவிர பயிற்சி பெற வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

உடற்கல்வி இயக்குநர் வசந்தகுமார், என்.சி.சி. அதிகாரியாக பொறுப்பேற்றுக் கொண்டார். பயிற்சி அதிகாரியான சீனிவாசன் தேசிய மாணவர் படை மாணவர்களுக்கு பயிற்சியளித்தார். வசந்தகுமார் அனைவருக்கும் நன்றி கூறினார்.



சேலம் மாவட்டம் வாழப்பாடி பேருந்து நிலையம் அருகில் நேற்று விசிக முதன்மைச் செயலாளர் உஞ்சை அரசன் உருவப்படத்திற்கு வடக்கு ஒன்றிய செயலாளர் வேல்முருகன் மலர் தூவி நினைவு அஞ்சலி செலுத்தினார். அருகில் மகளிர் அணி மாவட்ட செயலாளர் செங்கதிர், மாவட்ட துணைச் செயலாளர் பார்வதி, சங்கீதா, நிர்வாகிகள் கோவிந்தராஜ், தர்மலிங்கம், முருகேசன், சுரேஷ் சத்தியகுமார்உள்பட பலரும் உடன் இருந்தனர்.

## மகளிர் காவல் நிலையத்தில்

# மாற்றுத்திறனாளிகளுக்கு தீபாவளி பரிசு!

ஊத்தங்கரை, அக்.26–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் தீபாவளி முன்னிட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு புத்தாடைகள் மற்றும்பரிசுகள்வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு ஊத்தங்கரை காவல் நிலைய காவல் ஆய்வாளர் ஆர். முருகன் தலைமை தாங்கினார். மகளிர் காவல்

நிலையத்தில் பணியாற்றும் உதவி காவல் ஆய்வாளர் ரமணி, எஸ்ஐ கீதா, காவலர்கள் சங்கீதா, சுமதி ஆகியோர் முன்னிலை வகுத்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட மாற்றுத் திறனாளிகளுக்கு புத்தாடைகள், பரிசுகள், இனிப்பு ஆகியவற்றை ஆண்கள் பள்ளி முன்னாள் மாணவர்கள் சங்கத் தலைவர் ரா. சென்னகிருஷ்ணன் ஜேஆர்சி ஆசிரியர் கு.கணேசன் ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில்



சத்யா ஏஜென்சிஸ் குமரேசன், காதி கிராப்ட் பாஸ்கர், ஜீவா மற்றும் மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டனர். முன்னதாக மாற்றுத்திறனாளி திருப்பதி வரவேற்றார். மாற்றுத் திறனாளி திம்மையன் நன்றி கூறினார்.

# தேசிய பசுமை படை சார்பாக தற்சார்பு வாழ்வியல் பயிற்சி!

நாமக்கல், அக். 26–

இந்திய அரசின் வனம் சுற்றுச்சூழல் காலநிலை மாற்றம் துறை மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல் மற்றும் கால நிலை மாற்றம் துறை ஆணையின்படி நாமக்கல் மாவட்ட பள்ளி கல்வித்துறையின் தேசிய பசுமை படைசார்பாக 250 பசுமை படை ஒருங்கிணைப்பாளர்களுக்கு, நாமக்கல் தற்சார்பு வாழ்வியலில் பல் உயிர் தன்மை பாதுகாத்தல் மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடுகளால் உண்டாகும் பிரச்சினைகள், தீர்க்கும் வாழ்க்கை முறை, வீட்டு விலங்குகளின் சுகாதாரம் பற்றி பயிற்சி அளித்தார்.

.மூலிகை எண்ணெய்,மூலிகை ஷாம்பு, அரப்பு, இயற்கை கிருமி நாசினி, இயற்கை சோப்பு,




காவேட்டிப்பட்டி அருகே உள்ளதனியார்பள்ளியில், நீடித்த நிலைத்த தற்சார்பு வாழ்வியல் முறை குறித்த பயிற்சி மற்றும் பாரம்பரிய தற்சார்பு உணவு பொருள் கண்காட்சி நடைபெற்றது.

இதில் கலந்துகொண்ட மாவட்ட சுற்றுலா அலுவலர் அபராஜித்தன் முக்கிய தினங்கள் மற்றும் பொதுமக்கள் கூட கூடிய இடங்களில் பொதுமக்கள் பின்பற்ற வேண்டிய சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நடவடிக்கைகள், சுற்றுலா தளங்களில் இயற்கையை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள், சுற்றுலா தளங்களின் தூய்மை பேணுதலில் மக்கள் பங்கு பற்றி விளக்கமாக எடுத்துரைத்தார். முத்தாயம்மாள் கலை அறிவியல் கல்லூரியின் பேராசிரியர் சுகன்யா நாட்டு அத்திமதிப்பு கூட்டிய பொருட்கள் , கண்காட்சி அமைக்கப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

கொல்லிமலை பல்லுயிர் பாதுகாப்பு அறக்கட்டளை சார்பாக மீண்டும் மஞ்சப்பை திட்ட விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

அனைவருக்கும் மஞ்சப்பை இலவசமாக வழங்கப்பட்டு, அனைவரும் பசுமை பாதுகாப்பு உறுதி மொழிஎடுத்துக்கொண்டு, நாமக்கல் மாவட்டத்தில் உள்ள சுற்றுலாதளங்களை தூய்மையாக பராமரிக்க உறுதி எடுத்துக் கொண்டனர். இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பசுமைப்படை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ரகுநாத் சிறப்பாக செய்திருந்தார்.

# கல்லாவி அரசு பள்ளியில் மாணவர்கள் கலை திருவிழா!

ஊத்தங்கரை, அக்.26–

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த கல்லாவி அரசு மேல்நிலைபள்ளியில் குறுவள மையம் சார்பில் 1முதல் 5ஆம் வகுப்பு மாணவ மாணவிகளுக்கான கலைத் திருவிழா போட்டிகள் நடைபெற்றது, இப்போட்டிகளுக்கு பள்ளித் தலைமை ஆசிரியர் முனைவர் செ.சற்குணன் தலைமை தாங்கினார். பள்ளி பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் நடராஜன், ஊராட்சி மன்றத் தலைவர்ராமன், எஸ்எம்சி தலைவி ஈஸ்வரி, பிடிஏ உறுப்பினர்கள் கண்ணாயிரம், விஜியன் முன்னிலையில்.குருவள மேற்பார்வையாளர் வசந்தி அனைவரையும் வரவேற்றார்,

கல்லாவி சிஆர்சி க்கு உட்பட்ட அனைத்து இருபால் தலைமை ஆசிரியர்களும் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



பள்ளிக்குழந்தைகள் பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றிவாகை சூடினர். பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களை உற்சாகப்படுத்தினர். விழாவில் பள்ளி குழந்தைகள் அவரவர் தனித்திறன்களை வெளிப்படுத்தினர்.

### ஏற்காட்டில்

# மக்கள் சந்திப்பு திட்ட முகாம்!

## அமைச்சர் ராஜேந்திரன் பொதுமக்களிடம் மனுக்கள் பெற்றார்!!

ஏற்காடு, அக். 26–

ஏற்காட்டில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தலைமையில் ஏற்காடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் மக்கள் சந்திப்பு திட்ட முகாம் நேற்று நடைபெற்றது. இம்முகாமில் சுற்றுலாத்துறை அமைச்சர் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர் அவர் பேசியதாவது :

சேலம் மாவட்டத்தில் 84,151 குழந்தைகள் காலை உணவு திட்டத்தில் பயன்பெற்று வருகிறார்கள்.

மேலும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் சேலம் மாவட்டத்தில் 5.50 இலட்சம் மகளிர் ரூ.1,000/ மாதந்தோறும் பெற்று பயன்பெற்று வருகிறார்கள். குறிப்பாக, ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில் 7,852 மகளிர் பயன்பெற்று வருகிறார்கள். ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 1,807 நபர்களுக்கு முதியோர் உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அதேபோன்று, சேலம் மாவட்டத்தில் மகளிர் கட்டணமில்லா பேருந்து பயணத் திட்டத்தின் மூலம் 19 கோடி பயணங்களும், மாதந்தோறும் ரூ.1,000/ வழங்கும் புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 24,000 மாணவிகளும், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ் 16,000 மாணவர்களும், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் 82,837 மாணவ, மாணவிகளுக்கு திறன் பயிற்சிகளும் வழங்கப்பட்டு பயன்பெற்று வருகின்றனர். தமிழ்நாடு முதலமைச்சர் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் சிறப்பான ஆட்சியை வழங்கி வருகிறார்கள்.

மலைகிராம மக்களின் முன்னேற்றத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் தனிகவனம் செலுத்தி வருகிறார்கள். அதன்படி பொதுமக்களின் கோரிக்கை மனுக்கள் மீது அதிக முக்கியத்துவம் அளித்து விரைந்து கோரிக்கைகளை நிறைவேற்றிட அறிவுறுத்தியுள்ளார்கள்.

அந்தவகையில், பொதுமக்களிடம் இருந்து நேரடியாக மனுக்களைப் பெற்று குறைகளுக்கு தீர்வுகாண ஏதுவாக இன்றைய தினம் ஏற்காடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மீது மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களும், தொடர்புடைய அரசுத்துறை அலுவலர்களும் விரைந்து தீர்வுகாண நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சேலம் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கடந்த 23.10.2024 அன்று தொடங்கி சங்ககிரி, கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, கொளத்தூர், மேட்டூர், நங்கவள்ளி மற்றும் மேச்சேரி ஒன்றியங்கள், இடங்கணசாலை, எடப்பாடி நகராட்சிகளில் கடந்த இரண்டு நாட்களில் மக்கள் சந்திப்பு திட்ட முகாம்கள் நடத்தப்பட்டு ஏறத்தாழ 4,500 மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இம்முகாமானது 08.11.2024 வரை தொடர்ந்து நடைபெறவுள்ளது.

இவ்வாறு அமைச்சர் ராஜேந்திரன் பேசினார்கள்.

இதனைத்தொடர்ந்து, ஏற்காடு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பு திட்ட முகாமில் சாதிச் சான்று, தனிப்பட்டா, பட்டா பெயர் மாற்றம், புதிய குடும்ப அட்டை, வேளாண்மை உழவர் நலத்துறை, தோட்டக்கலை மலைப்பயிர்கள் துறை உள்ளிட்ட துறைகளின் மூலம் 34 பயனாளிகளுக்கு ரூ.10.40 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் வழங்கினார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் பிருந்தாதேவி, கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் மலையரசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். சிவலிங்கம், சேலம் வருவாய் கோட்டாட்சியர் அபிநயா, ஏற்காடு வருவாய் வட்டாட்சியர் ரமேஷ்குமார் உள்ளிட்ட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.




நாமக்கல் மாவட்ட கலெக்டர் உமா, மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் உள்ள நாமக்கல்தெற்குவட்டாரபோக்குவரத்து அலுவலகத்தில், சர்வதேசகாலநிலைநடவடிக்கைதினத்தை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட வன அலுவலர் கலாநிதி உள்பட பலர் உள்ளனர்.

### தர்மபுரி நகராட்சியுடன்

# இலக்கியம்பட்டி ஊராட்சியை இணைக்க எதிர்ப்பு தெரிவித்து அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம்!

## கே.பி.அன்பழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!!

தர்மபுரி, அக். 26–

இலக்கியம்பட்டி ஊராட்சியை தருமபுரி நகராட்சியுடன் இணைப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்தும், திமுக அரசை கண்டித்தும் தருமபுரி மாவட்ட அதிமுக மற்றும் இலக்கியம்பட்டி ஊராட்சி பொது மக்களின் சார்பிலும் தர்மபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

தருமபுரி நகருக்கு மிக அருகாமையில் உள்ள இலக்கியம்பட்டி ஊராட்சியை தருமபுரி நகராட்சியுடன் இணைப்பதற்கு தமிழக அரசு முயற்சி செய்து வருகிறது.திமுக அரசு பொறுப்பேற்ற நாளிலிருந்து மக்கள் மீது வரி சுமை மற்றும் விலை வாசி உயர்வை ஏற்றி வருகிறது. தர்மபுரி நகராட்சியில் அதிக அளவு வரி உயர்வு அதிகரித்து உள்ள நிலையில் தற்போது இலக்கியம்பட்டி ஊராட்சியை தருமபுரி நகராட்சியுடன் இணைக்க முயற்சி நடந்து வருகிறது.

முன்னாள் அமைச்சரும், மாவட்ட செயலாளருமான கே.பி.அன்பழகன் எம் எல்ஏ தலைமையில் நடைபெற்ற இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் இலக்கியம்பட்டி ஊராட்சியை தருமபுரி நகராட்சியுடன் இணைக்க எதிர்ப்பு தெரிவித்தும் திமுக அரசை கண்டித்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் மாநில விவசாய பிரிவு செயலாளர் டி.ஆர்.அன்பழகன்,சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தசாமி, மாவட்ட அவைத்தலைவர் தொ.மு. நாகராஜன், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் எஸ்.ஆர்.வெற்றிவேல் உள்ளிட்ட சார்பு அமைப்பு மாவட்ட செயலாளர்கள் ஒன்றிய நகர பேரூர்கழக நிர்வாகிகள் மற்றும் இலக்கியம்பட்டி வாழ் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.

### கத்தியை காட்டி மிரட்டி

# செல்போன், பணம் பறித்த 3 வாலிபர்கள் கைது!

ஆத்தூர், ஆக்.26–

சேலம் மாவட்டம் ஆத்தூர் பஸ் நிலையத்தில் நேற்று இரவு ஈரோடு மாவட்டம் அந்தியூர் பகுதியை சேர்ந்த சூரிய பிரகாஷ் என்பவர் நின்று கொண்டிருந்தபோது அந்த வழியாக வந்த ஆத்தூர் மந்தவெளி பகுதியை சேர்ந்த ரிஷி கேஸ் (23), ஆகாஷ் (22) மற்றும் 17 வயது சிறுவன் ஆகிய மூன்று பேரும் சூரிய பிரகாசிடம் நீங்கள் ஏன் இங்கு நிற்கிறீர்கள் என்றும் கேட்கும் பொழுது அப்பொழுது அவர் நான் விநாயகபுரத்தில் கண் கண்ணாடி கடையில் வேலை பார்த்து வருகிறேன் என்றும் ஹான்ஸ் பாக்கெட் வாங்குவதற்காக பஸ் நிலையம் வாங்க வந்தேன் என்றும் கூறினார் .

அப்பொழுது இங்கு ஹான்ஸ் பாக்கெட் இல்லை எங்களுக்கு



தெரிந்த கடையில் ஷான்ஸ் பாக்கெட் வாங்கி தருகிறோம் என்று ஆட்டோவில் கூட்டிக்கொண்டு பைத்தூர் சாலைக்கு சென்று ஆட்டோவில் இருந்து இறங்கி அவரிடம் கத்தியை காட்டி மிரட்டி சூரிய பிரகாஷிடம் செல்போன் மற்றும் பணத்தை பறித்துக் கொண்டுதப்பி ஓடிவிட்டார்கள் . உடனடியாக அந்த பகுதியில் வந்த நபர்களிடம் எந்த பகுதி என்று கேட்கும்பொழுது பைத்தூர்சாலை என்று கூறினார்கள்.

ஆத்தூர் நகர காவல் நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவத்தை கூறினார் இதனையடுத்து சப் இன்ஸ்பெக்டர் சக்தி வேல் ரிஷிகேஷ், மற்றும் ஆகாஷ் மீது வழக்கு பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைத்தனர் 17 வயது சிறுவனை சீர்சிறுத்த பள்ளிக்கு அவர்களை அனுப்பி வைத்தனர்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டத்தில் மாவட்ட செயலாளர் மதியழகன் எம்.எல்.ஏ. பேசினார். இதில் நகர்மன்ற தலைவர் பரிதா நவாப், நகர செயலாளர் நவாப் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம்!

## மதியழகன் எம்.எல்.ஏ. பங்கேற்பு!!

கிருஷ்ணகிரி, அக். 26–

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர்தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன்எம்.எல்.ஏ.கலந்து கொண்டு சிறப்புரை யாற்றினார்.

இந்தக் கூட்டத்தில் நகர செயலாளர் நவாப், நகர் மன்ற தலைவர் பரிதா நவாப், ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தசாமி, தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், மாவட்ட பொருளாளர் கதிரவன், மாநில பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம் பாஷா, மாவட்ட துணைச் செயலாளர் சாவித்திரி கடலரசுமூர்த்தி, பேரூர் செயலாளர் ஜே. கே.எஸ். பாபு,மாவட்ட அறங்காவல் குழு தலைவர் ரஜினி செல்வம் உள்ளிட்ட மாவட்ட நிர்வாகிகள் ஒன்றிய, நகர, பேரூர் நிர்வாகிகள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

### அ.தி.மு.க. ஆட்சியில்

# மத்திய அரசின் திட்டங்களை முழுமையாக பெற்றவர் எடப்பாடி பழனிசாமி!

## கே.பி.முனுசாமி பேட்டி!!

கிருஷ்ணகிரி,அக்.26–

மத்திய அரசின் திட்டங்களை தனது ஆட்சிக்காலத்தில் எடப்பாடி பழனிசாமி முழுமையாக பெற்று தந்தா£ என்று கே.பி.முனுசாமி கூறினார்.



அ.தி.மு.க. துணை பொதுச் செயலாளர் கே.பி. முனுசாமி எம்.எல்.ஏ. கிருஷ்ணகிரியில் நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்கூறியதாவது:–

போதையின் பாதையில் இளைஞர்கள் சென்றுவிடக்கூடாது என தமிழக முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் வீடியோ வெளியிட்டுள்ளார். இது குறித்து அறிவுரை வழங்க அவருக்கு தகுதியில்லை.

அதேபோல, கடந்தகால அ.தி.மு.க. அரசு மத்திய அரசிடம் தமிழகத்தை அடமானம் வைத்துவிட்டதாகவும் பேசியுள்ளார்.

ஆனால் அ.தி.மு.க., அரசுதான் தமிழகத்தின் மதிப்பை உயர்த்தியது. அதனால்தான் மத்திய அரசு பல்வேறு துறைகளில் தமிழகத்திற்கு முதலிடம் வழங்கியது. மத்திய அரசின் திட்டங்களை ராஜதந்திரத்துடன் செயல்பட்டு முழுமையாக வாங்கி தந்தவர் எடப்பாடி பழனிசாமி.

ஆனால் தமிழகத்தில் 4 ஆண்டு ஆட்சி நடத்திவரும் தி.மு.க., அரசு அப்படியில்லை. முதல்–அமைச்சர் மு.க. ஸ்டாலின் மத்திய அரசு குறித்து மேடையில் வீராப்பாக பேசிவிட்டு, தனியறையில் மோடியிடம் மண்டியிட்டு, மெட்ரோ திட்டத்திற்கு நிதி பெற்றுள்ளார். மத்திய அரசு ஆணையின்படியே, அமைச்சர் பொன்முடியின் துறை மாற்றப்பட்டது.

தமிழக வெற்றி கழக மாநாட்டை முன்னிட்டு பெரியார் கட்அவுட் வைத்துள்ளனர். அவரில்லாமல் தமிழகத்தில் அரசியல் நடத்த முடியாது. கடந்த காலங்களில் ஆந்திராவில் சிரஞ்சீவி இது போன்று பிரம்மாண்ட மாநாடு நடத்தி கட்சி தொடங்கினார். தற்போது நடிகர் விஜய்யும் அதேபோன்று மாநாடு நடத்துகிறார்.இவ்வாறு அவர் கூறினார்.

### கபிலர் மலை அருகே

# நாட்டு சர்க்கரை ஆலையை மூடக்கோரி பொதுமக்கள் சாலை மறியல்!

பரமத்திவேலூர், அக்.26–

கபிலர்மலை அருகேயுள்ள ரங்கம் பாளையத்தில் நாட்டுச் சர்க்கரை ஆலை செயல்பட்டு வருகிறது. அதிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் அருகிலுள்ள விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவதாக அப்பகுதிமக்கள்ஆலையை மூடக்கோரி சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு வந்த பரமத்திவேலூர் தாசில்தார் முத்துக்குமார், ஜேடர்பாளையம் போலீஸ் இன்ஸ்பெக்டர்இந்திராணி, ஆகியோர்சாலைமறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடமும், விவசாயிகளிடமும் பேச்சு வார்த்தை நடத்தினர். பேச்சு வார்த்தையில் கழிவு நீரை வெளியேற்றும் நாட்டுச் சர்க்கரை தயாரிக்கும் ஆலையின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்ததை தொடர்ந்து சாலை மறியலில் ஈடுபட்ட பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் அங்கிருந்து கலைந்து சென்றனர். இதனால் அப்பகுதியில் சுமார் ஒரு மணி நேரத்திற்கு மேலாக போக்குவரத்து பாதிக்கப்பட்டது .

### ராசிபுரம்

# உழவர் சந்தையின் முன் உள்ள கடைகளை அகற்ற வேண்டும்!

## விவசாயிகள் மனு!!

நாமக்கல்,அக்.26–

நாமக்கல் கலெக்டர் அலுவலகத்தில், ராசிபுரத்தை சேர்ந்த உழவர் சந்தை விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:

ராசிபுரம் உழவர்சந்தை கடந்த 20 ஆண்டுகளாக செயல்பட்டு வருகிறது. 40க்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து, விவசாயிகள்தங்களதுவிளைபொருட்களை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். தினமும் 200 முதல் 250

விவசாயிகள், உழவர்சந்தைக்கு வந்து காய்கறி மற்றும் பழங்களை விற்பனை செய்து வருகிறார்கள். உழவர் சந்தை நுழைவாயில் முன்பு, வெளிப்புற வியாபா ரிகள் காய்கறி கடைகளை அமைத்து வியாபாரம் செய்கிறார்கள். இதனால் விவசாயிகளின் விளை பொருட்கள் விற்பனை செய்ய முடியவில்லை.

எங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது. உழ வர்சந்தை நுழைவாயிலில் வியாபாரிகள் கடைகள் அமைத்து விற்பனை செய்வதால், போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ளது. எனவே, உழவர் சந்தைக்கு வெளிப்புறத்தில் உள்ள கடைகளை அகற்ற வேண்டும். இவ்வாறு மனு வில் கூறப்பட்டுள்ளது.



ராசிபுரம் பஸ் நிலையம் அருகே செயல்படும் உழவர் சந்தை முன்பு, வியாபாரிகள் காய்கறி கடை போடுவதை அகற்ற கோரி கலெக்டர் அலுவலகத்தில் மனு கொடுக்க வந்த விவசாயிகள்.

# மது போதையில் பெண்ணை தாக்கிய வாலிபர்!

சேலம், அக். 26–

சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி பகுதியைச் சேர்ந்தவர்ஜெயந்தி. இவர் தனது தாயுடன் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் தனது சித்தப்பாவை பார்க்க வந்துள்ளார். அப்போது மது போதையில் வந்த வாலிபர் ஒருவர் ஜெயந்தியை தலை முடியை பிடித்து தாக்கியுள்ளார். அப்போது உறவினர்கள் தடுத்தும் அந்த நபர் ஜெயந்தியை விடாமல் தாக்கியுள்ளார். இதை யடுத்து அருகில் இருந்த பொதுமக்கள் ஜெயந்தியை மீட்டனர். இதுகுறித்து தகவலறிந்து அரசு மருத்துவமனை போலீசார் விசாரணை செய்தனர். போலீஸ் விசாரணையில் பனமரத்துப்பட்டியைச் சேர்ந்த கார்த்திக் என்பது தெரியவந்தது. தொடர்ந்து போலீஸ் நடத்தி வருகின்றனர்.இது குறித்து ஜெயந்தி கூறுகையில்

எனக்கு திருமணமாகி 17 வருடம் ஆகிறது. நான் கலப்புத்திருமணம் செய்தேன் என்ற காரணத்திற்காக எனது அண்ணன் கார்த்தி 17 வருடமாக பேசாமல் இருந்தார். நேற்றுஎனதுசித்தப்பாவை பார்க்க வந்தேன். ஆனால் வந்த இடத்தில் கொலை வெறியுடன் என்னையும், எனது அம்மாவையும் கார்த்தி தாக்கினார். இது குறித்து ஜிஎச் போலீஸ் ஸ்டேஷனில் புகார் அளித்த போது அவர்கள் புகார் பெற்றுக் கொள்ளவில்லை என்றார்.

### தீபாவளி பண்டிகையை முன்னிட்டு

# குந்தாரப்பள்ளி சந்தையில் ரூ.5 கோடிக்கு ஆடுகள் விற்பனை!

குருபரப்பள்ளி,அக்.26–

கிருஷ்ணகிரி மாவட்டம் குந்தாரப்பள்ளி வாரச் சந்தை நேற்று நடந்தது. இதில் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு தமிழ



கத்தின் கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், வேலூர், கடலூர், விழுப்புரம் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், அண்டை மாநிலங்களான ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலங்களிலிருந்தும் 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடுகள் சந்தைக்கு கொண்டுவரப்பட்டன.

தொடர் மழை காரணமாக ஆடு விற்பனை சற்று மந்தமாகவே இருந்தது. வழக்கமாக பண்டிகை காலங்களில் ஒரு ஜோடி ஆடு அதிகபட்சமாக ரூ. 25000 முதல் ரூ. 35000 வரை விற்கும் நிலையில் நேற்று ஒரு ஜோடி ஆடுகள், 15,000 முதல் ரூ.25000 வரை மட்டுமே விற்கப்பட்டது. ஆண்டுதோறும் ரூ. 10 கோடி வரை வர்த்தகம் நடைபெறும் நிலையில் தற்போது 5 கோடி வரை மட்டுமே வர்த்தகம் நடைபெற்றது.

இதனால் தீபாவளி பண்டிகைக்கு ஆடுகளைவிற்பனைக்காக குவித்திருந்த விவசாயிகள் ஏமாற்றுதுடன் திரும்பி சென்றனர். ஆடுகள் அதிக வரத்து மற்றும் தொடர் மழை காரணமாக வியாபாரிகள் வராததால் ஆடுகள் விற்பனை மந்தமாக இருந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

# ஸ்டான்லி பள்ளி மாணவர்கள் மாநில அளவிலான சிலம்பம் போட்டிக்கு தகுதி!

பாப்பிரெட்டிப்பட்டி, அக். 26–

பாப்பிரெட்டிப்பட்டி. ஸ்டான்லி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மாணவர்கள் மாவட்ட அளவில் நடைபெற்ற சிலம்ப போட்டியில் வெற்றிபெற்று மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர்.

பெண்களுக்கான 17 வயதிற்குட்பட்டோர் பிரிவில் ஆர். சுதர்ஷினி, முதலிடமும், ஜீவிகா இரண்டாமிடமும் பிடித்து வெற்றி பெற்றுள்ளனர். 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் ஸ்ரீதரணி, ஷர்மிலி மற்றும் சுவேதாஸ்ரீ ஆகியோர் இரண்டாமிடமும் பிடித்து வெற்றி பெற்றுள்ளனர்.

ஆண்களுக்கான 17 வயதிற்குட்பட்டோர் பிரிவில் ஸ்ரீஷர்மா ஒற்றைக்காம்பு வீச்சில் மூன்றாமிடமும், ஹெலன் ஜெனிஸ் இரட்டைக்கம்பு வீச்சில் மூன்றாமிடமும், நவினேஷ் மூன்றாமிடமும், 19 வயதிற்குட்பட்டோர் பிரிவில் அனிஷ் முதலிடமும், சிவசங்கரன் இரண்டாமிடமும், மோகித் மூன்றாமிடமும் பிடித்து வெற்றி பெற்றுள்ளனர்.

வெற்றிபெற்ற மாணவர்களையும், பயிற்சி அளித்த உடற்கல்வி ஆசிரியர்கள் சத்யராஜ், ஆனந்தகுமார், திவ்யா மற்றும் ஜனார்த்தனன் ஆகியோரை பள்ளியின் தாளாளர் வி. முருகேசன், செயலாளர் எம். பிருஆனந்த்பிரகாஷ், ஆசிரியர்கள் மற்றும் பிற மாணவிகள் தங்கள் வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

மேலும் இப்போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் மாநில அளவிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்**
**தேன்கனிக்கோட்டை**
**மேஎஅதிமு:168/2024**
**பி2 நாள்: 30.07.2024.**

வெங்கடேஷ், த/பெ. நாராயணப்பா
வரகானப்பள்ளி கிராமம்
நாகமங்கலம் அஞ்சல்
தேன்கனிக்கோட்டை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்,
...மனுதாரர்
/எதிராக/
வட்ட நிர்வாக நடுவர் மற்றும்
வட்டாட்சியர், வட்டாட்சியர்
அலுவலகம் தேன்கனிக்கோட்டை

பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரர் அவரது தாயார் சின்ன சின்னம்மாள் என்பவர் கடந்த 15.02.1982-ம் தேதியில் மேற்படி விலாசத்தில் இறந்துள்ளார் இறப்பை பதிவு செய்ய தவறிவிட்டதால் தேன்கனிக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் முன்னிலையில் மேற்படி இறப்பை பதிந்து உத்தரவிடக்கோரி விண்ணப்பித்துள்ளார், மனுமீது ஆட்சேபணை இருப்பின் மேற்படி மனு குறித்து தேன்கனிக்கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் இந்த அறிவிப்பு நாளிதழில் வெளியாகி 15 நாட்களுக்குள்ளாக நேரில் ஆஜராகி தெரிவிக்க வேண்டியது, தவறினால் மேற்படிமனு ஒருதலைபட்சமாகதீர்மானிக்கப்படும் என்பதை அறியவும் .

PARTHIBAN ,B.A.,B.L.,
ADVOCATE AND NOTARY,
HOSUR, KRISHNAGIRI DT,

**வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்**
**தேன்கனிக்கோட்டை**
**மேஎஅதிமு:108/2024**
**பி2 நாள்: 24.05.2024.**

நாராயணப்பா ,
த/பெ. குப்பைய்யா (லேட்)
வரகானப்பள்ளி கிராமம்
நாகமங்கலம் அஞ்சல்
தேன்கனிக்கோட்டை வட்டம்,
கிருஷ்ணகிரி மாவட்டம்,
...மனுதாரர்
/எதிராக/
வட்ட நிர்வாக நடுவர் மற்றும்
வட்டாட்சியர், வட்டாட்சியர்
அலுவலகம் தேன்கனிக்கோட்டை

பொது அறிவிப்பு

மேற்படி மனுதாரர் அவரது தந்தை குப்பைய்யா என்பவர் கடந்த தேதியில் மேற்படி விலாசத்தில் இறந்துள்ளார். 27.10.1991-ம் இறப்பை பதிவு செய்ய தவறிவிட்டதால் தேன்கனிக்கோட்டை வருவாய் வாட்டாட்சியர் முன்னிலையில் மேற்படி இறப்பை பதிந்து உத்தர விடக்கோரி விண்ணப்பித்துள்ளார், மனுமீது ஆட்சேபணை இருப்பின் மேற்படி மனு குறித்து தேன்கனிக் கோட்டை வட்டாட்சியர் அலுவலகத்தில் இந்த அறிவிப்பு நாளிதழில் வெளியாகி 15 நாட்களுக்குள்ளாக நேரில் ஆஜராகி தெரிவிக்க வேண்டியது. தவறினால் மேற்படி மனு ஒருதலை பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும் .

SARAVANA,BA.,BL.,
ADVOCATE AND NOTARY,
RAYAKOTTAI, KRISHNAGIRI DT,

### வளர்ப்பு நாய்,சமையல்காரர் உள்ளிட்டோருக்கு

# ரூ.10ஆயிரம் கோடி சொத்துக்கு உயில் எழுதி வைத்த ரத்தன் டாடா!

மும்பை,அக்.26–

வளர்ப்பு நாள்,சமையல்காரர் உள்ளிட்டோருக்கு ரூ.10ஆயிரம் கோடி சொத்துக்கு ரத்தன் டாடா உயில் எழுதி வைத்த விவரம் தெரியவந்துள்ளது.

ரத்தன் டாடாவுக்கு ரூ.10ஆயிரம் கோடிக்கு மேல் சொத்துகள் உள்ளன. இந்நிலையில், சகோதரர் ஜிம்மிடாடா, தனது தாயின் இரண்டாவது திருமணத்தின் மூலம் பிறந்த ஒன்றுவிட்ட சகோதரிகள் ஷிரீன் மற்றும் டீன்னா ஆகியோருக்கும் சொத்துகள் கிடைக்கும்படி உயில் எழுதியுள்ளார்.

இவர்கள்தவிர்த்துதனது மனதுக்கு நெருக்கமான உதவியாளர் சாந்தனு, சமையல் கலைஞர் ராஜன் ஷா, சமையல் உதவியாளர்சுப்பையா ஆகியோருக்கும் உயில் எழுதியுள்ளார்.மேலும், அவரது பிரியத்துக்குரிய வளர்ப்பு நாயான டிட்டோவின் பெயரையும் உயிலில் குறிப்பிட்டுள்ளார்.

ராஜன் ஷா மற்றும் சுப்பையா இருவரும் டாடாவுடன் 30 ஆண்டுகளுக்கு மேல் இருந்தவர்கள். டாடா வெளிநாடுகளுக்கு செல்லும் போது அவருடன் இவர்கள் இருவரும் செல்வது வழக்கம்.

இந்நிலையில், வளர்ப்பு நாய் டிட்டோவை ராஜன் ஷா கவனித்துக் கொள்ள வேண்டும் என்று உயிலில் குறிப்பிட்டுள்ள ரத்தன் டாடா, அதைக் கவனித்துக் கொள்ளஆகும்செலவை ஈடுகட்டும் வகையில் சொத்துகளை ஒதுக்கியுள்ளார். சாந்தனு வெளிநாடு சென்று படிக்க டாடா நிறுவனம் கடன் கொடுத்தது. அக்கடனை ரத்தன் டாடா தள்ளுபடி செய்துள்ளார்.

மும்பை ஜுகுதாரா சாலையில் இரண்டு மாடிகள் கொண்ட வீடு. கடற்கரை நகரமான அலிபாக்கில் 2,000 சதுர அடி கொண்ட கடற்கரையோர பங்களா, 350 கோடி வங்கி டெபாசிட்கள் மற்றும் டாடா சன்ஸ் குழுமத்தில் 0.83 சதவீத பங்குகள் என ரத்தன் டாடா பெயரில் சொத்துகள் உள்ளன.அவரது பங்குகள் அனைத்தும் டாடா குழுமத்தின் பாரம்பரியத்திற்கு ஏற்ப உருவாக்கப்பட்ட ஒரு தொண்டு அறக்கட்டளையான ரத்தன் டாடா எண்டோவ்மென்ட் அறக்கட்டளைக்கு மாற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பாதயாத்திரையாக முதியோர் திருமலைக்கு வரவேண்டாம்!

## தேவஸ்தானம் வேண்டுகோள்!!

திருமலை,அக்.26–

பாதயாத்திரையாக முதியோர்கள் திருமலைக்கு வரவேண்டாம் என்று திருப்பதி தேவஸ்தானம் வேண்டுகோள் விடுத்துள்ளது. உலகப்புகழ் பெற்ற திருமலை ஏழுமலையான் கோயிலுக்கு வரும் பக்தர்கள் பலர் அலிபிரி மற்றும் ஸ்ரீநிவாச மங்காபுரம் அருகே உள்ள ஸ்ரீவாரி மெட்டு வழியாக மலையேறிச் சென்று ஏழுமலையானை தரிசித்து வருகின்றனர். இவர்களுக்காக திருப்பதி தேவஸ்தானம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

60 வயது நிரம்பிய முதியோர், சர்க்கரை நோயாளிகள், ரத்தக் கொதிப்பு, வலிப்பு நோய், மூட்டு வியாதி உள்ளவர்கள் தயவுசெய்து பாதயாத்திரையாக திருமலைக்கு வர வேண்டாம்.

அதிக உடல்பருமன் மற்றும் இதய வியாதி உள்ளவர்களும் திருமலைக்கு நடந்து செல்வது கூடாது. திருமலை கடல் மட்டத்தை விட அதிக உயரம் கொண்டது என்பதால், இதய நோய், உடல் பருமன் உள்ளவர்கள் மலை ஏற, ஏற ஆக்ஸிஜன் பிரச்சினை வரும் என்பதால் முன்னெச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

வழியில் உடல்நலப் பிரச்சினைகள் வந்தால், அலிபிரி மார்க்கத்தில் 1500வது படி அருகேயும், காலி கோபுரம்,ராமானுஜர் சன்னதி அருகேயும் மருத்துவ முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன. திருமலையில் அஸ்வினி தேவஸ்தான மருத்துவமனை உட்பட பல மருத்துவ மனைகள் இரவும், பகலும் பணியாற்றி வருகின்றன. சிறுநீரக பிரச்சினை உள்ளவர்களுக்கு திருப்பதி சிம்ஸ் மருத்துவமனையில் டயாலிசிஸ் வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு தேவஸ்தானம் கூறியுள்ளது.



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு அரூர்நகரில் குற்றச்செயல்களை தடுப்பது குறித்த விழிப்புணர்வு கூட்டம் டி.எஸ்.பி. கரிகால்பாரிசங்கர் தலைமையில் நடைபெற்றது. இதில் வணிகர்கள் கலந்து கொண்டனர்.

### பின்லேடன் பதுங்கியிருந்த

# பாகிஸ்தானின் அபோதாபாத்தில் தீவிரவாத மையங்கள்!

## புதிய தகவல்கள் வெளியீடு!!

அபோதாபாத்,அக்.26–

பாகிஸ்தானில் நீண்ட காலமாக தீவிரவாதி ஒசாமா பின்லேடன் மறைந்து வாழ்ந்து வந்த அபோதாபாத்தில் தற்போது தீவிரவாத மையங்கள் செயல்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.

லஷ்கர் இ தொய்பா, ஹிஸ்புல் முஜாஹிதீன், ஜெய்ஷ் இ முகமது போன்ற தீவிரவாத அமைப்புகளுக்கு மத்திய அரசுதடைவிதித்துள்ளது. இந்த 3 அமைப்புகள் இணைந்து அபோதாபாத்தில், புதிய தீவிரவாதப் பயிற்சி மையங்களை உருவாக்கியுள்ளது. இது புலனாய்வு அமைப்புகள் மூலம் தெரியவந்துள்ளது.

இதற்கு பாகிஸ்தான் ராணுவம்முழு ஆதரவை வழங்கியுள்ளதாக தெரியவந்துள்ளது.இந்த தீவிரவாத மையங்கள் அமைந்துள்ள பகுதியையொட்டி,பாகிஸ்தான்ராணுவ முகாமின் கதவு உள்ளதால், வெளியில் இருந்து தீவிரவாத பயிற்சி மையத்தை ராணுவத்தின் அனுமதி இல்லாமல் எளிதில் அணுக முடியாது என்று தெரியவந்துள்ளது.

எனவே, தீவிரவாத முகாம்கள் முழுக்க பாதுகாப்புடன் செயல்பட்டு வருவதாகத் தெரியவந்துள்ளது. பாகிஸ்தானின் புலனாய்வுத் துறையான ஐ.எஸ்.ஐ.யின் ஜெனரல் அந்தஸ்தில் உள்ள அதிகாரி ஒருவர் அந்த முகாமின் மேற்பார்வையாளராக உள்ளார் என்றும் கூறப்படுகிறது.

இந்த தீவிரவாதிகள் பயிற்சி முகாமில் பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஆயுதங்களை கையாளுதல், தாக்குதல் உள்ளிட்ட பயிற்சிகள் அளிக்கப்படுவதாக தெரிகிறது.

கடந்த 2011ம் ஆண்டில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்துக்கு அருகிலுள்ள அபோதாபாத்தில்தான் பின்லேடன் பாதுகாப்பான ஒரு வீட்டில் அமைத்து செயல்பட்டு வந்தார். அப்போது அபோதாபாத்துக்கு வந்த அமெரிக்க ராணுவம் அதிரடியாக செயல்பட்டுபின்லேடன் கும்பலை சுட்டுக் கொன்றது.இந்நிலையில், பின்லேடன் மறைந்து வசித்து வந்த இடத்தை 2012ல் பாகிஸ்தான் அரசு இடித்து தரைமட்டமாக்கியது.

இந்நிலையில் தற்போது அபோதாபாத்தில் செயல்பட்டு வரும் தீவிரவாத பயிற்சி மையமானது, பின்லேடன் வாழ்ந்து வந்த வீட்டின் இடிபாட்டுக்கு மேல் கட்டப்பட்டதா என்பது தெரியவில்லை.

இந்த முகாம் ஹபீஸ் சயீத் (லஷ்கர்இ தொய்பா), சயத் சலாஹுதீன் (ஹிஸ்புல் முஜாகிதீன்), மசூத் அசார் (ஜெய்ஷ் இ முகமது) ஆகியோரால் மிகப்பெரிய அளவில் இயக்கப்பட்டு வருவதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்த 3 பேரும் தேசிய புலனாய்வு முகமையால் தேடப்படும் தீவிரவாதிகள் பட்டியலில் உள்ளனர். இந்த முகாமின் முக்கிய நோக்கம் 3 தீவிரவாத அமைப்புகளுக்கும் ஆட்களை சேர்ப்பதுதான் என்பது குறிப்பிடத்தக்கது. பாகிஸ்தான் ராணுவத்தின் ஆதரவுடன் அபோதாபாத்தில் தீவிரவாத பயிற்சி மையங்கள் செயல்பட்டு வரும் தகவல் உலகளவில் அதிர்ச்சியைஏற்படுத்தியுள்ளது.



உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு மாவட்ட செஞ்சிலுவை சங்கம் சார்பில் ரூ.4.31 லட்சத்திற்கான காசோலை திருப்பூர் மாவட்ட கலெக்டர் கிறிஸ்துராஜிடம் வழங்கப்பட்டது. உடன் செஞ்சிலுவை சங்க செயலாளர் முருகநாதன், துணைத்தலைவர் அருள்செல்வம் மற்றும் நிர்வாகிகள் உள்ளனர்.

### கவரைப்பேட்டை ரெயில் விபத்து

# தீவிரவாத சதிக்கான ஆதாரம் இல்லை!

## என்.ஐ.ஏ தகவல்!!

புதுடெல்லி,அக்.26–

திருவள்ளூர் மாவட்டம் கவரைப்பேட்டை அருகே அக்.11–ஆம் தேதி பாக்மதி விரைவு ரெயில், சரக்கு ரெயில் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தின் பின்னணியில் தீவிரவாத சதி இருப்பதற்கான ஆதாரம் கிடைக்கவில்லை என்று தேசிய புலனாய்வு முகமை (என்ஐஏ) தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக டெல்லியில் உள்ள என்ஐஏ உயரதிகாரி கூறியதாவது–

இந்தியாவின் பல்வேறு இடங்களில் கடந்த சில மாதங்களில் ரெயில்கள் தடம் புரண்ட சம்பவங்கள் நடந்துள்ளன. அவை குறித்து சம்பவம் நடந்த மாநிலங்களின் காவல்துறையும் ரெயில்வே துறையும் தனித்தனியாக விசாரணைநடத்திவருகின்றன.

இந்தச் சம்பவங்களின் பின்னணியில் தீவிரவாத சதிஉள்ளதாஎன்றகோணத்தில் என்ஐஏ தனியாக ஆரம்பநிலை விசாரணையை நடத்தியது. தண்டவாளத்தில் உள்ள நட்டுகள் கழன்று விழுந்ததே விபத்துக்குக் காரணம் என கூறப்பட்டாலும், அது எப்படி நடந்தது, அதைச் செய்தது யார் அல்லது தற்செயலாக நடந்ததா என்ற கோணத்தில் மாநில காவல்துறையினர் விசாரித்து வருகின்றனர்.

இத்தகைய சம்பவங்கள் கவரைப்பேட்டை மட்டுமின்றி மேலும் சில இடங்களில் சமீபத்திய மாதங்களில் நடந்துள்ளன. அனைத்தையும் விசாரித்த என்ஐஏ குழு, அவை ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவையா என்ற கோணத்தில் புலனாய்வு மேற்கொண்டது. இருப்பினும், இவற்றில் தீவிரவாத சதிச் செயலுக்கான முகாந்திரம் இல்லை என்பதை கண்டறிந்துள்ளோம். பிரச்சினையின் தீவிரம் கருதி மாநில காவல்துறையின் விசாரணைக்கு தேவைப்படும் உதவிகளை என்ஐஏ செய்து வருகிறது என்றார்.

கடந்த அக். 9–ஆம் தேதி உத்தர பிரதேச மாநிலத்தில் ரேபரேலி பிரயாக்ராஜ் ரெயில்வே மார்க்கத்தில் குந்தன்கஞ்ச் நோக்கிச் சென்று கொண்டிருந்த சரக்கு ரெயிலின் முன்பக்கம், ஸ்லீப்பர் கட்டை மீது மோதி விபத்துக்குள்ளானது.கடந்த செப். 22–ஆம் தேதி கான்பூரில் உள்ள பிரேம்பூர் ரெயில் நிலையம் அருகே தண்டவாளத்தில் காலி எரிவாயு சிலிண்டர் இருப்பதை பார்த்த லோகோ பைலட் ரெயிலைநிறுத்தியதால் விபத்து தவிர்க்கப்பட்டது.

அதற்கு முன்னதாக, செப். 8ஆம் தேதி பிரயாக்ராஜில் இருந்து பிவானி நோக்கிச் சென்று கொண்டிருந்த காலிந்தி விரைவு ரெயிலை தடம் புரளச் செய்யும் நோக்கத்துடன் தண்டவாளத்தில் எல்பிஜி சிலிண்டரும் அதனருகே பெட்ரோல் நிரப்பிய குப்பிகள் மற்றும் தீப்பெட்டிகள் இருந்தன.

# ஈரான் தலைநகர் மீது இஸ்ரேல்...

1–ம் பக்கத் தொடர்ச்சி

பாலஸ்தீனம் கொண்டு வரப்பட்டது. அதன்பிறகு அங்கு யூதர்கள் குவியத் தொடங்கினர். இதன் விளைவாக 1948–ஆம் ஆண்டு மே மாதம் 14–ஆம் தேதி இஸ்ரேல் நாடு சுதந்திரம் அடைந்தது.

இதை பாலஸ்தீனத்தில் வசித்து வந்த அரபு இன மக்கள் கடுமையாக எதிர்த்தார்கள். பிற அரபு நாடுகளும் கடுமையாக எதிர்த்தன. ஆகவே இஸ்ரேல் மீது அரபு நாடுகள் ஒன்று சேர்ந்து போர் தொடுத்தன. மொத்தம் மூன்று போர்கள் நடந்தன. அனைத்திலும் இஸ்ரேலே வெற்றி பெற்றது.

பாலஸ்தீனத்தையும் முழுமையாக கைப்பற்றியது. பின்னர் பாலஸ்தீன மக்களுக்கு சுயாட்சி அதிகாரம் வழங்கியது. இருந்தாலும் இஸ்ரேல் ராணுவத்தின் பிடி பாலஸ்தீனத்தின் மீது உள்ளது.

இந்த பாலஸ்தீனம் 2 பகுதிகளை கொண்டது. ஒரு பகுதிக்கு மேற்கு கரை என்று பெயர். இதுதான் பெருநிலப் பகுதி. இன்னொன்று காசா துண்டு நிலம். இந்த இரண்டுக்கும் இடையே இஸ்ரேல் அமைந்துள்ளது.

காசா துண்டு நிலத்தில் ஹமாஸ் தீவிரவாதிகளின் ஆதிக்கம் மேலோங்கியது. அங்கு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றினார்கள். இவர்கள் அடிக்கடி இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தி வந்தார்கள்.

ஆனால் கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் மிகப் பெரிய தாக்குதலை தொடுத்தனர். ஒரே நேரத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ராக்கெட்டுகளை வீசினார்கள். அது மட்டுமல்லாது இஸ்ரேலுக்குள் புகுந்தும் தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,200 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். சுமார் 250 பேரை பிடித்துக் கொண்டும் சென்றனர். அவர்களை காசாவில் உள்ள சுரங்க அறைகளில் பிணைக் கைதிகளாக வைத்துக் கொண்டனர்.

இதனால் கோபம் கொண்ட இஸ்ரேல் நாடு காசா மீது போரை தொடுத்தது. அங்கு இதுவரை நடந்த தாக்குதலில் 42,500–க்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டுள்ளார்கள். ஏராளமான ஹமாஸ் தளபதிகளும், தீவிரவாதிகளும் உயிரிழந்தனர்.

அங்கு இன்னும் போர் நடந்து வருகிறது. ஹமாசுக்கு ஆதரவாக லெபனான் நாட்டிலுள்ள ஹிஸ்புல்லா தீவிரவாதிகளும், ஏமன் நாட்டிலுள்ள ஹவுத்தி தீவிரவாதிகளும் அடிக்கடி தாக்கி வந்தனர்.

இவர்களுக்கும் இஸ்ரேல் அவ்வப்போது பதிலடி கொடுத்து வந்தது. ஆனால் கடந்த ஒரு மாதமாக லெபனான் மீதுள்ள ஹிஸ்புல்லாக்கள் மீது தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளது. இங்கும் வான் தாக்குதலும், நேரடித்தாக்குதலும் இடம் பெற்று வருகின்றன.

இந்தத் தாக்குதலில் ஹிஸ்புல்லா தளபதிகள் அனைவரும் வரிசையாக கொல்லப்பட்டார்கள். அதில் அதன் தலைவர் ஹசன் நஸரல்லாவும் அடங்குவார்.

ஹமாஸ், ஹிஸ்புல்லா, ஹவுத்தி ஆகிய 3 தீவிரவாத இயக்கங்களுக்கும் ஈரான் அனைத்து உதவிகளையும் செய்து வருகிறது. குறிப்பாக ஹிஸ்புல்லாக்களுக்கு நேரடியாக ஆயுதப் பயிற்சிகளை வழங்கி வருகிறது.

இதற்காக ஈரானிய ராணுவ அதிகாரிகள் லெபனானுக்கு சென்று வருகிறார்கள். அப்படி சென்ற பல ஈரானிய அதிகாரிகளை இஸ்ரேல் குண்டு வீசி கொன்றது. மேலும் டெஹ்ரானுக்கு வந்த ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே என்பவரும் கொல்லப்பட்டார்.

இதற்கு பதிலடியாக இஸ்ரேல் மீது கடந்த ஏப்ரல் மாதம் ஈரான் சுமார் 300 ஏவுகணைகளை வீசியது. இதற்கு இஸ்ரேல் உரிய பதிலடி கொடுக்கவில்லை. ஒரேயொரு ஏவுகணையை மட்டும் செலுத்தியது.

இந்த நிலையில் ஹசன் நஸரல்லா கொல்லப்பட்ட பிறகு, மீண்டும் இஸ்ரேல் மீது மிகப் பெரிய தாக்குதலை ஈரான் நடத்தியது. இந்த முறை அதி நவீன ஏவுகணைகளை ஈரான் பயன்படுத்தியது.

இதனால் இஸ்ரேலில் சிறிய அளவில் சேதம் ஏற்பட்டது. இந்தச் சம்பவம் அக்டோபர் 1–ஆம் தேதி நடந்தது. இதற்கு சரியான பதிலடி கொடுக்கப்படும் என இஸ்ரேல் எச்சரித்தது.

அதன்படி ஈரானின் அணு ஆயுத மையம், மின் சக்தி நிலையங்கள், எண்ணெய் உற்பத்தி நிலையங்கள் ஆகியவற்றை தகர்க்க இஸ்ரேல் முடிவு செய்தது. இதற்கு அமெரிக்கா எதிர்ப்பு தெரிவித்தது.

அதனால் தாக்குதல் திட்டத்தை இஸ்ரேல் தள்ளி வைத்தது. இருந்தாலும் நிச்சயம் பதிலடி உண்டு என்றும், இது மிகக் கொடியதாக இருக்கும் என்றும் தெரிவித்தது.

இப்படிப்பட்ட நிலையில் ஒரு மாதம் நெருங்கிய நிலையில் இன்று இஸ்ரேல் ராணுவம் ஈரான் மீது துல்லிய தாக்குதல்களை நடத்தி உள்ளது. அதாவது இஸ்ரேலிய போர் விமானங்கள் பறந்து வந்து ஈரான் தலைநகர் டெஹ்ரான் மற்றும் அதைச் சுற்றி உள்ள இடங்கள் மீது ஏவுகணைகளை பொழிந்துள்ளன.

இதன் மூலம் ஈரான் நாட்டின் ராணுவ நிலைகள் தகர்க்கப்பட்டுள்ளன. மொத்தம் 3 அலைகளாக வந்து இஸ்ரேலிய போர் விமானங்கள் குண்டு மழை பொழிந்துள்ளன. இந்தத் தாக்குதலை தங்களது உரிமையும், கடமையும் என்று இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

ஈரானின் அணு ஆயுத மையங்கள் மீதோ, மின்நிலையங்கள் மீதோ இஸ்ரேல் தாக்குதல் நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இஸ்ரேலின் இன்றைய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று ஈரான் தெரிவித்துள்ளது.

ஆகவே மேற்கு ஆசியாவில் போர் பதற்றம் உச்சம் பெற்றுள்ளது. ஈரானும், ஈராக்கும் விமானச் சேவைகளை முற்றாக ரத்து செய்து விட்டன.

# முரசம்

26-10-2024

# லெபனான் மற்றொரு காசாவாக மாறுகிறதா?

ஹிஸ்புல்லா மீதான தாக்குதலால் இஸ்ரேல் தலைவர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர். வாக்கிடாக்கி மற்றும் பேஜர் வெடிப்பில் தொடங்கிய இத்தாக்குதல், தற்போது தீவிரமான வான்வழித் தாக்குதல்களாக உருவெடுத்துள்ளது. காசாவில் ஓராண்டாக நடைபெற்று வரும் போர் சிக்கலானதாக உள்ளது. ஹமாஸ் குழுவினர் சுரங்கப் பாதைகளிலிருந்து வெளிவந்து, இஸ்ரேல் படையினரை கொல்கின்றனர், காயம் ஏற்படுத்துகின்றனர். இஸ்ரேல் பணயக்கைதிகளை ஹமாஸ் இன்னும் விடுவிக்கவில்லை.தற்போதுநடைபெறும்தாக்குதல்ஹிஸ்புல்லாவிடமிருந்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான தங்கள் இலக்கை அடைய உதவும் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நம்புகிறார்.

இஸ்ரேல் மீது ராக்கெட்டுகள் ஏவுவதை ஹிஸ்புல்லா நிறுத்த வேண்டும் என நெதன்யாகு விரும்புகிறார். எல்லையிலிருந்து ஹிஸ்புல்லாவைத் திருப்பி அனுப்ப விரும்புவதாக இஸ்ரேல் ராணுவம் கூறுகிறது. மேலும், இஸ்ரேலுக்கு அச்சுறுத்தலாக விளங்கும் ராணுவத் தளங்களை அழிக்கவும் இஸ்ரேல் ராணுவம் விரும்புகிறது. ஹிஸ்புல்லாவின் சில தாக்குதல்களில் இஸ்ரேலில் உள்ள குடியிருப்புப் பகுதிகளும் குறிவைக்கப்பட்டன. இது குடிமக்களைப் பாதுகாப்பதற்கான விதிமுறைகளை மீறுவதாக இருந்தது. ஹிஸ்புல்லா, இஸ்ரேல் ராணுவத்தையும் குறிவைத்தது. இஸ்ரேல், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் ஹிஸ்புல்லாவை பயங்கரவாத அமைப்பாகக் கருதுகின்றன. தங்களது ராணுவம் போர் விதிமுறைகளைக் கடைபிடிப்பதாக இஸ்ரேல் வலியுறுத்திக் கூறுகிறது.

ஆனால், காசாவில் இஸ்ரேல் ராணுவத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக உலகின் பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. எல்லையில் போர் மூளும் சூழல் ஏற்பட்டுள்ளதால், இப்பிரச்சினை இன்னும் தீவிரமாகியுள்ளது. ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேலுக்கு இடையேயான மோதல், 1980–களில் துவங்கியது. ஆனால், சமீபத்திய எல்லை போர் 2023–ஆம் ஆண்டு, அக்டோபர் 7–ஆம் தேதிக்குப் பின்னர் துவங்கியது. ஹமாசுக்கு ஆதரவாகக் கட்டுப்படுத்தப்பட்ட, ஆனால் தினசரித் தாக்குதலுக்கு ஹசன் நஸ்ரல்லா உத்தரவிட்டதால், இஸ்ரேல் ராணுவம் சிக்கல்களை எதிர்கொண்டது. இதனால், எல்லைப்பகுதியில் வசிக்கும் சுமார் 60,000 பேர் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டது.

இப்பிரச்சினையை உற்றுநோக்கும் பலரும் ஹிஸ்புல்லா சண்டையை நிறுத்தாது என நம்புகின்றனர். ஹிஸ்புல்லா இதை நிறுத்தாவிட்டால் போருக்கான வாய்ப்பை இஸ்ரேல் இன்னும் விரிவாக்கும். மற்றொரு புறம், ஹிஸ்புல்லா வடக்கு இஸ்ரேலில் தங்கள் தாக்குதல்கள் மூலம் இஸ்ரேல் மக்களை மீண்டும் அப்பகுதிக்கு திரும்பிவருவதை அனுமதிக்காது. அப்போது, தரைவழி மூலம் தாக்குதல் நடத்துவது குறித்து நெதன்யாகு ராணுவம் முடிவுசெய்யும். ஒருவேளை, இஸ்ரேல் ராணுவம் அதன் ஒருபகுதியை கூட கைப்பற்றலாம். காசாவில் நடந்து வரும் தாக்குதல்கள் மற்றும் மேற்குக் கரையில் அதிகரித்து வரும் வன்முறைகளுக்கு மத்தியில் இஸ்ரேல் லெபனானுக்குள் நுழைந்தால், அது மூன்றாவது போர்முனையைத் திறக்கும். இஸ்ரேலிய வீரர்கள் உந்துதல் பெற்றவர்களாகவும், நன்கு பயிற்சி பெற்றவர்களாகவும், ஆயுதம் ஏந்தியவர்களாகவும் இருக்கலாம், ஆனால் அவர்கள் ஒரு வருடப் போரினால் சோர்ந்து போயிருக்கலாம்.

கடந்த சில தினங்களாக ஆயிரக்கணக்கிலான வான்வழி தாக்குதல்களை லெபனானில் இஸ்ரேல் நடத்தியுள்ளது. அமைதியான தீர்வை அடைவதில் உள்ள சவால்கள் அமெரிக்கா தலைமையிலான இஸ்ரேலின் நட்பு நாடுகள், ஹிஸ்புல்லாவுடனான இஸ்ரேலின் போரை அதிகரிக்க விரும்பவில்லை. இந்த நாடுகளும் லெபனானுக்குள் நுழைவதற்கு ஆதரவாக இல்லை. ராஜதந்திர வழிமுறைகள் மூலம் மட்டுமே எல்லைகளைப் பாதுகாக்க முடியும், குடிமக்கள் நாடு திரும்ப முடியும் என்று இந்த நாடுகள் வலியுறுத்துகின்றன. 2006–இல் நடைபெற்ற போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஐ.நா. பாதுகாப்பு தீர்மானம் 1701–இன் அடிப்படையில் அமெரிக்கத் தூதுவர் ஒருவர் ஒப்பந்தம் ஒன்றை தயாரித்துள்ளார்.

ஏற்கனவே பொருளாதாரச் சவால்களை எதிர்நோக்கும் லெபனானின் சாமானிய குடிமக்களின் வேதனை, இஸ்ரேலின் தாக்குதல்களால் மேலும் அதிகரித்துள்ளது. எல்லையில் இருபுறமும் அச்சம் நிலவுகிறது.

ஹிஸ்புல்லா கடந்த ஆண்டை விட அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது என்பது இஸ்ரேலியர்களுக்கும் தெரியும். ஆக்ரோஷமான நிலைப்பாட்டை எடுத்து எல்லையில் இருந்து ஹிஸ்புல்லாவை பின்னுக்குத் தள்ள வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று இஸ்ரேல் நம்புகிறது. ஆனால் இஸ்ரேல், திறம்பட ஆயுதம் ஏந்திய, சினம் கொண்ட படைகளை எதிர்கொள்கிறது.

ஹமாஸ் இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்திய பின்னர் கடந்த ஒரு வருடத்தில் ஏற்பட்டுள்ள மிக ஆபத்தான நெருக்கடி இதுவாகும். தற்போது நிலைமை மோசமடைவதைத் தடுக்க யாராலும் முடியாது.

# குதிரை வண்டியில் வரும் தொண்டர்கள்!

விக்கிரவாண்டி, அக்.26–

விக்கிரவாண்டி அருகே உள்ள வி. சாலையில் நாளை தமிழகவெற்றிக்கழகமாநாடுகோலாகலமாகநடைபெற உள்ளது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ள அக்கட்சித் தொண்டர்கள் தீவிர ஆர்வம் காட்டி வருகின்றனர்.

வித்தியாசமான முறையில் மாநாட்டுக்கு வரும் முனைப்பில் பலர் உள்ளனர். நெல்லையைச் சேர்ந்த தொண்டர்கள்அங்கிருந்துகுதிரைவண்டியில்புறப்பட்டு வருகின்றனர்.அதற்காகஅலங்கரிக்கப்பட்ட2குதிரைகள் பூட்டிய வண்டி விக்கிரவாண்டியை நோக்கி வந்து கொண்டிருக்கிறது. அதில் அக்கட்சித் தொண்டர்கள் பயணம் செய்கின்றனர்.



பவானி ஸ்ரீ,செல்லியாண்டியம்மன், மற்றும் மாரியம்மன், கோயில் கும்பாபிஷேகம், செய்வதற்காக கோயில் கட்டட பணி தலைவர் தி. பிரபாத் மகேந்திரன், தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

# முத்ரா கடன் வரம்பு ரூ.20 லட்சமாக உயர்வு!

## மத்திய நிதியமைச்சகம் அறிவிக்கை வெளியிட்டது!!

புதுடெல்லி, அக். 26–
நாட்டில் வேளாண் சாராத சிறுதொழில்களை ஊக்குவிக்கும் பிரதமரின் 'முத்ரா' திட்டத்தின்கீழ் கடன் வரம்பு ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.20 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. இது தொடர்பான அறிவிக்கையை மத்திய நிதியமைச்சகம் வியாழக்கிழமை வெளியிட்டது.

கடன் வரம்பு உயர்வின் மூலம் முத்ரா திட்டத்தின் ஒட்டுமொத்த நோக்கம் மேலும் மேம்படும் என்று நிதியமைச்சகம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மத்தியில் மூன்றாவது முறையாக பிரதமர் மோடி தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு கடந்த ஜூன் மாதம் பதவியேற்றது. இதைத் தொடர்ந்து, 2024–25ஆம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட் கடந்த ஜூலை 23 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது.

அப்போது, முத்ரா திட்டத்தின்கீழ் வழங்கப்படும் கடன் உச்ச வரம்பு தற்போதைய ரூ.10 லட்சத்தில் இருந்து ரூ.20 லட்சமாக உயர்த்தப்படும் என்ற அறிவிப்பை நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வெளியிட்டார்.

'முத்ரா திட்டத்தில் 'தருண்' பிரிவின்கீழ் பெற்ற முந்தைய கடன்களை முறையாகச் செலுத்திய தொழில்முனைவோர், ரூ.20 லட்சம் வரை கடன் பெற முடியும். நாட்டில் தொழில்முனைவோருக்கு உகந்த சூழலை வலுப்படுத்தும் நோக்கில் இந்த முடிவு மேற்கொள்ளப்பட்டது' என்று அவர் தெரிவித்தார்.

இந்நிலையில், ரூ.20 லட்சம் வரை கடன் பெற முத்ரா திட்டத்தில் 'தருண் பிளஸ்' என்ற புதிய பிரிவு உருவாக்கப்பட்டுள்ளது. முந்தைய கடன்களை முறையாகச் செலுத்தியவர்கள் இப்பிரிவில் கடன் பெறலாம் என்று அறிவிக்கையில்கூறப்பட்டுள்ளது.

ரூ.20 லட்சம் கடனுக்கான உத்தரவாத காப்பீடு, சிறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதியின் கீழ் (சிஜிஎஃப்எம்யு) வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநிறுவனம், விவசாயம் சாராத சிறுகுறு தொழில்முனைவோரின் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு உதவுவதற்காக, ரூ.10 லட்சம் வரை பிணையம் இன்றி எளிமையான முறையில் கடன் வழங்கும் முத்ரா திட்டம் பிரதமர்மோடியால்கடந்த 2015ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ் சிஷு (ரூ.50,000 வரை), கிஷோர் (ரூ.50,000 முதல் ரூ.5 லட்சம் வரை), தருண் (ரூ.10 லட்சம்) ஆகிய பிரிவுகளில் கடன்கள் அளிக்கப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# இஸ்ரேலில் 30,000 இந்தியர்கள்!

## மத்திய வெளியுறவுச் செயலர் தகவல்!!

புது டெல்லி, அக்.26–
இஸ்ரேல் பாலஸ்தீனம் விவகாரம் குறித்து நாடாளுமன்றக் குழுவுக்கு மத்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி தலைமையிலான குழு வெள்ளிக்கிழமை எடுத்துரைத்தது. அப்போது இஸ்ரேலில் 30,000 இந்தியர்கள் வசிப்பதாக அந்தக் குழு குறிப்பிட்டது.

இதுதொடர்பாக விக்ரம் மிஸ்ரி தலைமையிலான குழு எடுத் துரைத்த விளக்கக் காட்சியில், 'மேற்கு ஆசியாவில் பதற்றமான சூழல் நிலவும் முன்பே இஸ்ரேலுடன் இந்தியா மேற்கொண்ட ஒப்பந்தத்தின்படி 9,000 கட்டுமான தொழிலாளர்கள் மற்றும் 700 வேளாண் தொழிலாளர்கள் இஸ்ரேலுக்கு சென்றனர். அவர்களுடன் சேர்த்து மொத்தமாக 30,000 இந்தியர்கள் வசிக்கின்றனர். ஆபரேஷன் விஜய் திட்டத்தின்கீழ் 1,300க்கும் மேற்பட்ட இந்தியர்கள் மற்றும் சில நேபாளியர்கள் இஸ்ரேலில் இருந்து மீட்கப்பட்டனர். இஸ்ரேல் பாலஸ்தீனம் இடையிலான பிரச்னைக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண பிரதமர் மோடி வலியுறுத்தியுள்ளார் என தெரிவிக்கப்பட்டது.



கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், பையனப்பள்ளி ஊராட்சியில், கால்நடை பராமரிப்பு துறை சார்பாக 21–வது கால்நடை கணக்கெடுப்பு பணியினை கலெக்டர் கே.எம்.சரயு துவக்கி வைத்தார். உடன் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் இளங்கோவன் உள்ளார்.

### மதுரையில் வெள்ளம்:

# பாதிப்புகளை கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்!

## பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தல்!!

சென்னை, அக்.26–
மதுரையில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை கண்டறிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரேமலதா விஜயகாந்த் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தே.மு.தி.க. பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

மதுரையில் வரலாறு காணாத கனமழை பெய்ததினால் மதுரை முழுவதும் தண்ணீர் தேங்கிக் குடியிருப்புகளைச்சூழ்ந்த வெள்ளம் மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்து இருக்கின்றது. தண்ணீர் உடனடியாக வடிவதற்கு வைகை ஆறு மற்றும் குளங்கள் இயற்கையாகவே அமைந்திருக்கும் மதுரையில் இந்த அளவு தண்ணீர்தேங்க வேண்டியதன் காரணம் என்ன? கண்மாய், ஓடைகள் முறையாகத் தூர்வாராமல் இருந்ததினாலே ஆலங்குளம் கண்மாயில் உடைப்பு ஏற்பட்டு அதனை சுற்றியுள்ள பகுதிகளாகிய பீபிகுளம், செல்லூர் போன்ற பகுதிகளில் தண்ணீர் சூழ்ந்துள்ளது.

பெரும் மழையாக இருந்தாலும் ஓரிரு நாள் மழைக்கே ஏன் இந்த அளவு பாதிப்பு என்பதனை ஆராய்ந்து மதுரை மாநகராட்சி மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும். உடனடியாக மாநகராட்சியும், அதிகாரிகளும் களத்தில் இறங்கிப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வேண்டிய உணவு, உடை, மருந்து மாத்திரைகள், தங்குவதற்கான இடம் கொடுத்து அவர்களைப் பாதுகாத்துத் தேங்கி இருக்கின்ற தண்ணீரை உடனடியாக அப்புறப்படுத்தி நோய் பரவாமல் தடுத்துப் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் உடனடியாக உதவிகளைச் செய்து இந்த மழைக் காலத்தில் காக்க வேண்டியது இந்த அரசின் கடமை. ஓரிரு நாள் மழைக்கே ஏன் இந்த அளவு பாதிப்பு என்பதனை மதுரை மாநகராட்சியும், தமிழக அரசும் விளக்கம் தரவேண்டும் என தேமுதிக சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# நீச்சல் போட்டிகளில் பதக்கம் குவிக்கும் பள்ளி மாணவர்!

கோவை, அக்.26–
கோவை நேஷனல் மாடல் சீனியர் செகண்டரி பள்ளியில் 11வது வகுப்பு படித்து வரும் மாணவர் அஹில்பாலாஜி. இவர் சி.பி.எஸ்.இ தெற்கு மண்டல நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு 200 மீட்டர் பட்டர்பிளை பிரிவு, 200மீட்டர்பேக்ஸ்ட்ரோக் பிரிவுகளில் தங்கப்பதக்கம், 100 மீட்டர் பட்டர்பிளை பிரிவு, 400 மீட்டர் தனிநபர் மெட்லி பிரிவில் 2 வெள்ளிப்பதக்கம், 200 மீட்டர் தனி நபர் மெட்லியில் ஒரு வெண் கலப்பதக்கம் வென்றார்.

மேலும் அவர், தமிழக முதல்அமைச்சர்கோப்பை விளையாட்டு போட்டிகளில் மாநில அளவில் 2 வெள்ளிப்பதக்கம் மற்றும் தலா ரூ.75 ஆயிரம் பரிசுத் தொகை பெற்றார். அதுபோல் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை போட்டிகளில் 2 தங்கப்பதக்கம், ரூ.6 ஆயிரம் பரிசு பெற்றார். சி.பி. எஸ்.இ தேசிய அளவிலான நீச்சல் சாம்பியன் போட்டி யில் 200 மீட்டர்



பட்டர்பிளை பிரிவில் மாணவர் அஹில் பாலாஜி வெள்ளிப் பதக்கம் வென்றார்.

இதன் மூலம் அவர், குஜராத் மாநிலம் ராஜ் கோட்டில் நடைபெறும் எஸ்.ஜி.எப்.ஐ. தேசிய போட்டியில் விளையாட தேர்வாகி உள்ளார். எனவே, மாணவர் அஹில் பாலாஜியை நேஷனல் மாடல் கல்விநிறுவனங்களின் தலைவர் பி.மோகன் சந்தர், பள்ளி நிர்வாகிகள், தலைமையாசிரியர், ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் வாழ்த்தினர்.

### வழக்கை முடித்து வைக்க

# எஸ்.ஐ. போல போலி கையெழுத்து போடப்பட்டதா?

## விசாரிக்க கோர்ட்டு உத்தரவு!!

மதுரை, அக். 26–
தேனி மாவட்டம், சுப்புலாபுரத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற எஸ்ஐ கோவிந்தராஜன், ஐகோர்ட் மதுரை கிளையில் தாக்கல் செய்த மனு: எனது புகாரின்பேரில் ராஜேஸ்வரி என்பவர் மீது கண்டமனூர் போலீசார் வழக்குப்பதிவு செய்தனர்.

இந்த வழக்கு விசாரணை குறித்த எந்த தகவலும் எனக்கு தெரிவிக்கவில்லை. பின்னர் புகார் தவறு என ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் போலீசார் அறிக்கை தாக்கல் செய்து முடித்தனர். எதன் அடிப்படையில் வழக்கு முடிக்கப்பட்டது என்பது குறித்து ஆர்டிஐயில் கேட்டேன். அப்போது, எனது கையெழுத்தை போலியாக போலீசாரே போட்டு வழக்கை முடித்தது தெரிய வந்தது. இதற்கு காரணமான காவல் துறையினர் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறுகூறியிருந்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதி கே.முரளிசங்கர், மனுதாரர் புகார் மீது தேனி எஸ்பி விசாரித்து, குற்றச்சாட்டில் உண்மை இருந்தால் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாகத்தில் தீபாவளி சிறப்பு ஆவின் பொருட்களின் விற்பனையை கலெக்டர் கிறிஸ்துராஜ் துவக்கி வைத்தார். உடன் பொது மேலாளர் (ஆவின்) சுஜாதா, துணைப்பதிவாளர் (பால்வளம்) கணேஷ் ஆகியோர் உள்ளனர்.

### உ.பி. அரசு மருத்துவமனையில் அலட்சியம்:

# 5 வயது சிறுமி உயிரிழப்பு!

## 4 மருத்துவர்கள் மீது நடவடிக்கை!!

புடோன், அக். 26–
உத்தர பிரதேசத்தில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர்களின் அலட்சியத்தால் 5 வயது சிறுமி காய்ச்சலில் உயிரிழந்த சம்பவம் நிகழ்ந்தது. இதில் தொடர்புடைய மருத்துவர்கள் இருவர் பணிநீக்கம் செய்யப்பட்டனர். இரண்டு மருத்துவர்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

புடோன் மாவட்ட அரசு மருத்துவமனையில் காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட சிறுமி புதன்கிழமை உயிரிழந்தார். அவருக்கு சிகிச்சை அளிக்காமல், மருத்துவக் கல்லூரி மருத்துவர்களும், சுகாதார ஊழியர்களும் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்ததாக சிறுமியின் குடும்பத்தினர் குற்றம்சாட்டினர். இதைத் தொடர்ந்து, மருத்துவக் கல்லூரி நிர்வாகம் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட விசாரணைக் குழுவை அமைத்தது.

விசாரணைக் குழு தனது அறிக்கையை வியாழக்கிழமை மாலை சமர்ப்பித்தது. அதனடிப்படையில், இதில் தொடர்புடைய ஒப்பந்த மருத்துவர்கள் இருவர் பணிநீக்கம் செய்யப்பட்டதாகவும், இரண்டு மருத்துவர்கள் ஒரு மாதம் பணி இடைநீக்கம் செய்யப்பட்டதாகவும் கல்லூரி நிர்வாகம் தெரிவித்தது.

மருத்துவக் கல்லூரியின் முதல்வர் மருத்துவர் அருண்குமார் கூறுகையில், 'பணிநீக்கம் செய்யப்பட்ட மருத்துவர்கள் சிறுமி அனுமதிக்கப்பட்ட நேரத்தில், கிரிக்கெட் விளையாடவில்லை. கிரிக்கெட் போட்டியைக் காணச் சென்றிருந்தனர். குழந்தைகள்நல மருத்துவர்கள் சுகாதார ஊழியர்கள் இல்லாத காரணத்தால், சிறுமி வெவ்வேறு அறைகளுக்கு மாற்றப்பட்டு பின்னர் உயிரிழந்தார்' என தெரிவித்தார்.

### கோவை கீரணத்தத்தில்

# பெண்ணை தாக்கிய 4 பேர் மீது வழக்கு!

சரவணம்பட்டி, அக். 26–
கோவை கோவில்பாளையம் காவல் நிலையத்துக்கு உட்பட்ட கீரணத்தம் கல்லுக்குழி ஹவுசிங் யூனிட் பகுதியைச் சேர்ந்தவர் நவாஸ். இவரது மனைவி நிஷா (32) பெட்டிக்கடை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நிஷா, கிரேஸி என்பவரிடம் ரூ.10000 கடன் வாங்கி இருந்துள்ளார். இந்த கடனை கிரேஸி திரும்ப கேட்டுள்ளார். இந்நிலையில்சம்பவத்தன்றுகிரேஸி 3 பேரை அழைத்துக் கொண்டு நிஷாவிடம் சென்று பணம் கேட்டு தகராறில் ஈடுபட்டுள்ளார். மேலும் நிஷாவை தகாத வார்த்தைகளால் பேசி அவரை தாக்கி கொலை மிரட்டல் விடுத்துள்ளனர். இதில் காயமடைந்த நிஷா கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இது குறித்து நிஷா கொடுத்த புகாரின் அடிப்படையில் கோவில்பாளையம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து நிஷா மீது தாக்குதல் நடத்திய கிரேஸி, சீதா, சந்தியா, மாரி ஆகிய 4 பேர் மீதும் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### கோவை விளாங்குறிச்சி அருகே

# மூதாட்டியிடம் நகை பறிப்பு!

சரவணம்பட்டி, அக். 26–
கோவை கோவில்பாளையம் காவல் நிலையத்துக்கு உட்பட்ட விசுவாசபுரம் பகுதியைச் சேர்ந்தவர் மீனா குமாரி (52). இவர் விளாங்குறிச்சி சாலையில் உள்ள தனியார் பள்ளியில் படிக்கும் தனது பேத்தியை பள்ளியில் இருந்து அழைத்துச் வர சென்று கொண்டிருந்தார்.

அப்போது அந்த வழியாக இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர் ஒருவர் அவரிடம் விலாசம் கேட்பது போல் நடித்து மீனா குமாரியின் முகத்தில் மிளகாய் பொடியை தூவி அவர் கழுத்தில் இருந்த 3 சவரன் தங்கச்சியினை பறித்துக்கொண்டு தப்பிச் செல்ல முயன்றுள்ளான். அப்போது சுதாரித்துக் கொண்ட மீனாகுமாரி செயினை இறுகப் பிடித்துக் கொண்டார்.

இதில் செயின் பாதியாக அறுந்தது உடனே 1½ சவரன் பாதி செயினை பறித்துக் கொண்டு மர்ம நபர் தப்பிச் சென்றுள்ளான். இது குறித்து மீனா குமாரி கொடுத்த புகாரின் அடிப்படையில் கோவில் பாளையம் காவல்துறையினர் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### கோவை வந்தே பாரத்

# ரெயில் என்ஜின் புரோக்கிராமை போதையில் மாற்றிய ஊழியர் கைது!

கோவை, அக். 26–
மது போதையில் கோவையில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வந்தே பாரத் ரெயில் என்ஜின் புரோக்கிரமை தாறுமாறாக மாற்றி வைத்த ஊழியர் கைது செய்யப்பட்டார்.

சேலம் ரயில்வே கோட்டத்திற்கு உட்பட்ட கோவையில் இருந்து சென்னைக்கும், பெங்களூருவிற்கும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் ரயில்கள் இயக்கப் பட்டு வருகிறது. இந்த ரயில்களில் இணைத்து இயக்குவதற்காக வந்தே பாரத் மாற்று இன்ஜின் ஒன்று, எப்போதும் கோவை ரயில்வே ஸ்டேஷனில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இந்த மாற்று வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் இன்ஜினில், லோகோ பைலட்டுகள் ஏறினர் அப்போது, ரயில் இயக்கத்திற்கான புரோகிராம் அனைத்தும் மாற்றி வைக்கப்பட்டிருந்தது. இதனை பார்த்து அதிர்ச்சியடைந்தலோகோபைலட்டுகள், உடனடியாகசேலம் கோட்ட இயக்கப்பிரிவு உயர் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.

அப்போது, அந்த இன்ஜினில் மர்மநபர் ஏறி, ரயில் இயக்கத்திற்கான புரோகிராமை மாற்றி வைத்திருப்பது தெரியவந்தது. சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை வைத்து புரோகிராமை மாற்றிய கோவை ரயில்வே ஸ்டேஷனில் உள்ள லோகோ பைலட்டுகளுக்கான ஓய்வறையில் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி வரும் ஊழியர் ஹரிகரன் (28) என்பது தெரியவந்தது. இதைத் தொடர்ந்து ஆர்பிஎப் போலீசார் கைது செய்து விசாரித்தனர் அப்போது அவர், குடிபோதையில் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் இன்ஜினில் ஏறி புரோகிராமை மாற்றி அமைத்தது தெரியவந்தது.

### திருமணம் செய்ய வற்புறுத்திய

# இன்ஸ்டா பெண் பிரபலத்தை கொன்று புதைத்த காதலன் உள்பட 2 பேர் கைது!

## டெல்லி அருகே அதிர்ச்சி சம்பவம்!!

புதுடெல்லி, அக். 26–
டெல்லியில் திருமணம் செய்ய வற்புறுத்தியதால் கர்ப்பமாக இருந்த இன்ஸ்டா பெண் பிரபலத்தை அவரது காதலன் கொன்று புதைத்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக 2 பேரை கைது செய்துள்ள போலீசார் தலைமறைவான மேலும் ஒருவரை தேடி வருகின்றனர்.

டெல்லியைச் சேர்ந்த 19 வயதான சோனி என்ற இளம்பெண் இன்ஸ்டாகிராமில் மிகவும் பிரபலமாக இருந்தார். இதனால் அவரை 6 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பின்தொடர்கிறார்கள். இந்த நிலையில் அவருக்கும் சஞ்சு என்ற வாலிபருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருந்தது. காதலர்கள் இருவரும் சேர்ந்து எடுத்த புகைப்படம் மற்றும் வீடியோக்களை இன்ஸ்டாவில் பதிவிட்டு வந்தனர். இதற்கிடையே சோனி 7 மாத கர்ப்பிணியாக இருந்தார். எனவே தன்னை திருமணம் செய்துகொள்ளும்படி காதலனை வற்புறுத்தி வந்துள்ளார். ஆனால் சஞ்சு திருமணம்செய்துகொள்ள மறுத்து விட்டார். மேலும் கர்ப்பத்தை கலைக்குமாறு கூறி வந்துள்ளார். இதனால் இருவருக்கும் இடையில் தகராறு ஏற்பட்டு வந்துள்ளது.

இதனை தொடர்ந்து சோனியை கொலை செய்ய முடிவு செய்த சஞ்சு, சோனியை அரியானாவில் உள்ள ரோஹ்தக் நகருக்கு வருமாறு அழைத்தார். அதை நம்பிய சஞ்சு அங்கு சென்றார். அப்போது சஞ்சு அவரின் நண்பர்கள் இருவரை அங்கே வரவழைத்துள்ளார். இந்த நிலையில் சஞ்சுவுக்கும் , சோனிக்கும் இடையே திருமணம் செய்வது தொடர்பாக மீண்டும் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போதுதிட்டமிட்டபடி சோனியை நண்பர்கள் உதவியுடன் சஞ்சு கொலை செய்துள்ளார். பின்னர் சோனி உடலை அந்த பகுதியில் புதைத்து விட்டனர்.

இது தொடர்பாக சோனியை காணவில்லை என அவரின் உறவினர்கள் போலீசில் புகார் கொடுத்தனர். அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தி காதலன் சஞ்சு மற்றும் அவருக்கு உதவிய ஒருவரை கைது செய்தனர். மேலும் தலைமறைவான மற்றொருவரை தேடி வருகின்றனர்.



ஊத்தங்கரை காவல் உட்கோட்டத்திற்க்கு உட்பட்ட சிங்காரபேட்டை, காவல் நிலையம் ஊத்தங்கரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை வருடாந்திரஆய்வுமேற்கொண்டார். காவல்துணைகண்காணிப்பாளர்சீனிவாசன், சிங்காரப்பேட்டை இன்ஸ்பெக்டர் சந்திரகுமார், ஊத்தங்கரை இன்ஸ்பெக்டர் முருகன், மற்றும் உதவி ஆய்வாளர்கள் தலைமை காவலர்கள் கலந்து கொண்டனர்.

### உடுமலை அருகே

# காயத்துடன் கிடந்த அரிய வகை கழுகு குஞ்சு !

## வனத்துறையிடம் ஒப்படைப்பு!!

உடுமலை, அக். 26–
திருப்பூர் மாவட்டம் உடுமலை அருகே கண்ணமநாயக்கனூர் ஊராட்சியில் விவசாயி செல்வராஜ்என்பவரின்மல்பெரி தோட்டம் பகுதியில் இன்று காலை அரிய வகை கழுகு குஞ்சு ஒன்று காயத்துடன் அவதிப்பட்டு வந்தது.

மேலும் பறக்க முடியாமல் மிகவும் திணறிக் கொண்டிருந்த நிலையில் விவசாய செல்வராஜ் உடுமலையில் உள்ள 24 மணி நேரம் செயல்படும் கால்நடை மருத்துவமனைக்கு கழகு குஞ்சை கொண்டு வந்தார் அங்கு கால்நடை மருத்துவர் சுகன்யா கழுகு குஞ்சுக்கு சிகிச்சை அளித்தார் பின்னர் வனத்துறையிடம் தகவல் தெரிவித்த பின்னர் உடுமலை வனச்சரகர் மணிகண்டன் அறிவுறுத்தல் படி வனத்துறை ஊழியர் மலர் என்பவரிடம். கழுகு குஞ்சு ஒப்படைக்கப்பட்டது வனத்துறையினர் கூறும் பொழுது:–

காயத்துடன் அவதிபட்ட கழுகு குஞ்சு எனவும் தற்பொழுது கால்நடை மருத்துவர் மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது வனத்துறை அலுவலகத்தில் ஒரு மணி நேரம் கண்காணிப்பில் பாதுகாக்கப்பட்டு பின்னர் முழுவதும் சரியானதும் அடர்ந்த வனப் பகுதியில் விடப்படும் என தெரிவித்தார்.



தர்மபுரி நகராட்சி பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பாதாள சாக்கடை திட்ட பணிகளை அமைச்சர்கள் கே.என்.நேரு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அருகில் கலெக்டர் சாந்தி, எம்.எல்.ஏ.க்கள் ஜி.கே.மணி, எஸ்.பி.வெங்கடேஷ்வரன், முன்னாள் எம்.எல்.ஏ., தடங்கம் சுப்பிரமணி, முன்னாள் அமைச்சர் பழனியப்பன், தர்மபுரி நகர் மன்ற தலைவர் லட்சுமி நாட்டான் மாது ஆகியோர் உள்ளனர்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்தது!

மேட்டூர், அக்.26–

கர்நாடக காவிரி நீர் பிடிப்பு பகுதிகளில் மற்றும் பல்வேறு மாவட்டங்களில் கன மழை பெய்து வருவதால் அணைக்கான நீர்வரத்து அதிகரித்து வருகிறது.

தற்போது அணைக்கு நீர் வரத்து 31,575 காண அடியிலிருந்து 33,148 கனியாக அதிகரித்துள்ளது அணையின் நீர்மட்டம் நேற்று 102. 92 கன அடியிலிருந்து நேற்று ஒரே நாளில் 2 அடி உயர்ந்து 104.76அடியாக உள்ளது அணையின் நீர் இருப்பு 71.14 டி.எம்.சி ஆகவும் அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 7,500 கன அடியில் இருந்து 2,500கன அடி குறைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மேற்கு வாய்க்கால் பாசனத்திற்கு வினாடிக்கு 600 கன அடி நீர் வெளியேற்றப்பட்டு வரும் நிலையில் அணையில் இருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு குறைவாக இருப்பதால் அணைக்கான நீர்வரத்து அதிகமாக இருப்பதாலும் அணையின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது.

தினந்தோறும்
மாலை முரசு
படியுங்கள்




### ஆன்லைன் ஷாப்பிங் அதிகரிப்பால்

# சிவகாசி பட்டாசு ஆலைகளில் இந்த ஆண்டு விற்பனை சரிவு!

## மோசடி நிறுவனங்கள் பெருகியுள்ளது அம்பலம்!!

சென்னை, அக்.26–

தீபாவளி நெருங்கி விட்ட நிலையில் ஆன்லைன் ஷாப்பிங் அதிகரிப்பால் சிவகாசி மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் உள்ள பட்டாசுக் கடை உரிமையாளர்கள் இந்த ஆண்டு விற்பனை சரிவை சந்தித்து வருகிறார்கள். மேலும் மோசடி நிறுவனங்கள் பெருகியுள்ளது தெரியவந்துள்ளது.

குட்டி ஜப்பான் என அழைக்கப்படும் சிவகாசியில் வழக்கமாக தீபாவளி பட்டாசுகள் விற்பனைகளை கட்டும். பல மாதங்களுக்கு முன்பாகவே பணிகள்தீவிரமடையும். வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகள் குவிந்து விடுவார்கள்.

இதனால் ஆங்காங்கே ஆயிரக்கணக்கான விற்பனை நிலையங்கள் திறக்கப்பட்டு விடும். ஆனால் இந்த ஆண்டு வழக்கத்தை விட ஆன்லைன் ஷாப்பிங் அதிகரித்து வருகிறது. இதனால் நேரில் வந்து வாங்குவதை தவிர்த்து வீட்டில் இருந்தவாறே பட்டாசு, இனிப்புகள், ஆடைகள் என வாங்கும் போக்கு அதிகரித்து விட்டது. இந்த நிலையில் மோசடி பேர்வழிகள் மிகக் குறைந்த விலையில் விற்பனை செய்வதால் வியாபாரிகள் பலர் அவர்களிடம் சிக்கியுள்ளனர்.

இதனால் வழக்கமான கடைகளில் உள்ள கவுண்டர்கள் வாடிக்கையாளர்கள் இல்லாமல் வெறிச்சோடி கிடக்கின்றன. விற்பனை சரிவுக்குக் காரணம் மக்கள் ஆன்லைன் ஷாப்பிங்கை விரும்புவதும், மாத இறுதியில் வரும் கிறிஸ்துமஸ், கார்த்திகை தீப திருநாள் வருவதால் ஆன்லைனில் அதிரடி சலுகைகள் அறிவித்துள்ளது தான்.

இது குறித்து சிவகாசி பகுதி வியாபாரிகள் கூறியதாவது,

பயணச் செலவை குறைக்கவும், குறைந்த விலையில் உயர்தர பட்டாசுகளை வாங்கவும், தமிழகத்தின் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் ஆன்லைனில் ஆர்டர் செய்கிறார்கள். இருப்பினும்சிவகாசியில் சொந்தமாக கடை வைத்து ஆன்லைனில் பட்டாசுகளை விற்கும் மோசடியாளர்களுக்கு பல வாடிக்கையாளர்கள் பலியாகின்றனர். மிகக் குறைந்த விலை என்று சில கடைக்காரர்கள்கூறி விற்பதால் அங்கு மக்கள் செல்கிறார்கள். இது தவிர சில போலி இணையதளங்கள் ரூ.2 அல்லது ரூ.3 தள்ளுப்படி என விலை நிர்ணயம் செய்கின்றன. ஆனால் சொன்னபடி ஆன்லைன் விற்பனையாளர்கள் வாடிக்கையாளர் ஆர்டர் செய்த சரியான அளவுக்கு பட்டாசுகளை அனுப்புவதில்லை. இதனால் ஆர்டர் செய்த வாடிக்கையாளர் விற்பனையாளரைத் தொடர்பு கொள்ள முயற்சிக்கும் போது அவர்கள் செல்போனை இணைப்பு கிடைப்பதில்லை. அத்தகைய மோசடி செய்பவர்களுக்கு எதிராக அரசாங்கம் தீவிர நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.மேலும் சிவகாசியை சேர்ந்த விற்பனை நிலையங்கள் போல் நடித்து இணையதளங்களில் இருந்து ரூ.10,000முதல்ரூ.40,000 வரை ஆர்டர் வாங்கி சில நிறுவனங்கள் ஏமாற்றிய சம்பவங்களும் நிகழ்ந்து வருகிறது.

இவ்வாறு கூறினர்.

### ஐயப்ப பக்தர்கள் விமானத்தில்

# இருமுடியை கொண்டு செல்ல அனுமதி!

## சிவில் விமான பாதுகாப்பு பணியகம் தகவல்!!

சென்னை, அக்.26–

சபரிமலை ஐயப்பன் கோயிலுக்கு மாதந்தோறும் ஏராளமான பக்தர்கள் மாலை அணிந்து சென்று வருவது வழக்கம். அந்த வகையில், இன்னும் சில தினங்களில் கார்த்திகை மாதம் தொடங்க உள்ள நிலையில், சபரிமலைக்கு விமானத்தில் பயணிக்கும் பக்தர்களின் வசதிக்காக தற்போது புதிய நடைமுறையை விமான போக்குவரத்து துறை அமைச்சகம் வெளியிட்டுள்ளது. தேங்காய் சரக்கு பட்டியலில் இடம் பெறும் என்பதால் அதனை விமானத்தில் எடுத்து செல்ல அனுமதி வழங்கப்படுவதில்லை.

சபரிமலைக்கு செல்லும் பக்தர்கள் இருமுடி கட்டி செல்லும் போது அதில் தேங்காய் இருக்கும் என்பதால் விமானத்தில் எந்த விதமான கூடுதல் கட்டணமும் இன்றி எடுத்து செல்ல அனுமதிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை உடனடியாக அமலுக்கு வருவதாகவும் டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

# சிவகார்த்திகேயனை பாராட்டிய ராணுவ உயர் அதிகாரி!

கமல்ஹாசன் தயாரிப்பில், சிவகார்த்திகேயன் நடிப்பில் ராஜ்குமார் பெரிய சாமி இயக்கத்தில் உருவாகியுள்ள அமரன் வரும் தீபாவளியன்று வெளியாகிறது. வீர மரணம் அடைந்த இந்திய ராணுவ மேஜர் முகுந்த் வரதராஜனின் வாழ்க்கை வரலாற்றை மையமாகக் கொண்டு உருவாக்கப்பட்ட இப்படம் சிறப்பு காட்சியாக ராணுவ அதிகாரிகளுக்கு திரையிட்டு காட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் இது குறித்து சிவகார்த்திகேயன் கூறியதாவது," படப்பிடிப்பு நடைபெற்றபோது இருந்த



பதற்றத்தைவிட படத்தினை ராணுவ வீரர்கள் பார்க்கின்றார்கள் என்றபோது இன்னும் அதிகரித்தது. குறிப்பாக ராணுவ வீரர்கள் என்ன சொல்லுவார்கள் என்ற பதற்றம் ஒட்டிக்கொண்டது. படத்தினை இடைவேளை வரை பார்த்த சீனியர் ராணுவ வீரர் என்னிடம் வந்து, 'யூ ஆர் இன் ராங் புரொபெஷன்' எனக் கூறினார். படம் முடிந்த பின்னர் அதே மூத்த ராணுவ வீரர் என்னிடம் வந்து 'நான் உங்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு தருகின்றேன், என்ன சொல்றீங்க எனக் கேட்டார். இதை கேட்ட நான், 'இதுதான் சார் நீங்கள் எனக்கு கொடுக்கின்ற விருது' என மகிழ்ச்சியோடு கூறினேன். மேலும் நானும் மேஜர் முகுந்தும் மிடில் கிளாஸில் பிறந்தவர்கள் என்பதால் என்னால் அவரை எளிதாக உள்வாங்க முடிந்தது. நான் எந்த இடத்திலும் சினிமாவாக நினைத்து நடிக்கவில்லை என இயக்குநர் ராஜ்குமார் பெரியசாமி பாராட்டினார்" என்கிறார்.



# சூர்யாவுடன் ஜோடி சேரும் மிருணாள் தாக்கூர்?

சூர்யா நடிப்பில் உருவாகியுள்ள,'கங்குவா' வரும் நவம்பர் 14ம் தேதி வெளியாகவுள்ளது. இப்படத்தை தொடர்ந்து கார்த்திக் சுப்புராஜின் இயக்கத்தில் உருவாகி வந்த 'சூர்யா 44' படத்தின் படப்பிடிப்பும் மொத்தம் 100 நாட்களுக்குள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. கேங்ஸ்டர் படமாக உருவாகியுள்ள இப்படத்தில் சூர்யாவின் ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்துள்ளார். இப்படத்தின் இறுதிக்கட்ட பணிகள் தற்போது மும்முரமாக நடந்து வருகிறது. இந்நிலையில் சூர்யா, அடுத்ததாக நடிகரும் இயக்குநருமான ஆர்.ஜே. பாலாஜி இயக்கத்தில் 'சூர்யா 45' படத்திலும் நடிக்க கமிட்டாகியுள்ளார். இந்த படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக ருக்மணி வசந்த் அல்லது மிருணாள் தாக்கூர் நடிக்க உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்கள் இருவரில் ஒருவர் சூர்யாவிற்கு ஜோடியாகவுள்ளதாகவும் அதற்கான இறுதிக்கட்ட பேச்சு வார்த்தைகள் நடந்து வருவதாகவும் கூறப்பட்டுள்ளது. இதனிடையே படத்தின் முக்கிய கேரக்டரில் காஷ்மிரா பர்தேசி நடிக்க கமிட்டாகியுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. திரில்லர் பாணியில் உருவாகவுள்ள இப்படத்தின் டைட்டில் 'கருப்பு' என வைக்கப்பட உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# சர்வதேச திரைப்பட விழாக்களில் விருதுகளை குவிக்கும் 'தி ஸ்டீலர்'!



ஸ்ரீ மாணிக்கம்மன் வென்சர்ஸ் பட நிறுவனம் சார்பில், சி.என். குமார் தயாரித்துள்ள புதிய படம், 'தி ஸ்டீலர்'. இப்படத்தில் கோபிநாத் சங்கர், விக்னேஷ் செல்லப்பன், சிவாஸ் கே. எம், பொன்னி சுரேஷ், ஹர்ஷிதா, சதீஷ்குமார், பி. சீனிவாஸ் கணேஷ், மதன் சர்மா, கார்த்திகேயன் சுந்தரேசன், அபிஷேக் தங்கமணி, பாலாஜி ஸ்ரீ ராம், கிருபா மோல் தாமஸ் உள்பட பலர் நடித்துள்ளனர். இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ள புதுமுக இயக்குனர் ஜெகதீஷ் கன்னா கூறியதாவது,

"ஒரு ஏரோஸ்பேஸ் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி, தனது அலுவலகத்தில் இருந்து மிக ரகசியமான தகவல்களை கொண்ட மடிக்கணினி காணாமல் போன வழக்கை விசாரிக்கிறார். 9 ஊழியர்களிடம் விசாரணை நடத்தியதன் முடிவில், ஆச்சரியமான திருப்பத்துடன் படம் முடிவடைகிறது. முற்றிலும் புதுமுகங்கள் நடித்து உருவாகியுள்ள இப்படம் இதுவரை 14 சர்வதேச திரைப்பட விழாக்களில் தேர்வாகி 8 விருதுகளை வாங்கி குவித்துள்ளது. இதில் பாகிஸ்தான், இத்தாலி, ஜார்ஜியா, மோல்டோவா, ரோம் நாட்டு திரைப்பட விழாக்களும் அடக்கம். இப்படம் என் வாழ்வில் நடந்த ஒரு உண்மைச் சம்பவத்தை மையமாக வைத்து 'ரோஷாமன் விளைவு' மற்றும் ஹீரோஸ் ஜேர்னி கான்செப்ட், திரைக்கதை அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளது. இப்படம் ஐ.டி ஊழியர்களின் எண்ண ஓட்டங்களை மையப்படுத்தி எடுக்கப்பட்டுள்ளது. சிறிய பட்ஜெட்டில் வித்தியாசமாகவும் உலகத்தரமாகவும் அதேசமயம் தயாரிப்பாளருக்கு நஷ்டம் ஏற்படாமலும் ஒரு படம் செய்து காட்ட, எங்களின் ஒரு சிறு முயற்சி தான் 'தி ஸ்டீலர்'. இப்படத்திற்கு தற்போது உலகளாவிய அங்கீகாரம் கிடைத்து வருவது பெரிய மகிழ்ச்சியை அளித்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார். இப்படத்தின் ஒளிப்பதிவை சிவானந்தா காந்தி கவனிக்க, அருள் டோனி, பிஜோர்ன் சுராவ் ஆகியோர் இணைந்து இசையமைத்துள்ளனர்.

# ஸ்பெயினில் இருந்து திடீரென சென்னை திரும்பிய திரிஷா!

## விஜய் மாநாட்டில் பங்கேற்பாரா?

அஜித், திரிஷா நடிப்பில், ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருவாகி வரும் 'குட் பேட் அக்லி' படத்தின் அடுத்த கட்ட படப்பிடிப்பு தற்போது ஸ்பெயின் நாட்டில் நடந்து வருகிறது. அங்கு அதிரடி ஆக்சன் காட்சிகள் மற்றும் ரொமான்ஸ் காட்சிகள் படமாக்கப்பட்டு



வருவதாக கூறப்படும் நிலையில், கடந்த சில நாட்களாக படப்பிடிப்பில் கலந்து கொண்டிருந்த திரிஷா திடீரென சென்னை திரும்பி உள்ளார். இந்நிலையில் நாளை விஜய் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவே திரிஷா சென்னை திரும்பியுள்ளதாக சமூக வலைதளங்களில் தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து திரிஷாவின் நெருங்கிய வட்டாரம் கூறுகையில், ஒரு நகைக்கடை விளம்பரத்தில் நடிக்க ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்ததால், திரிஷா சென்னை திரும்பி உள்ளதாகவும், அந்த விளம்பரத்தில் நடித்து முடித்தவுடன் அவர் மீண்டும் ஸ்பெயின் சென்று 'குட் பேட் அக்லி' படப்பிடிப்பில் கலந்து கொள்வார் என்கிறது.



# ஹாலிவுட் நடிகர் படத்திலிருந்து விலகிய ஸ்ருதிஹாசன்!

ஆங்கில எழுத்தாளர் திமேரி என். முராரி எழுதிய 'அரேஞ்ச்மெண்ட் ஆஃப் லவ்' நாவலை அடிப்படையாகக் கொண்டு 'சென்னை ஸ்டோரி' என்ற ஆங்கிலத் திரைப்படம் உருவாகி வருகிறது. இந்த படத்தில், இந்திய வம்சாவளி ஹாலிவுட் நடிகர் விவேக் கல்ரா ஹீரோவாக நடிக்கிறார். பாஃப்டா விருதைப் பெற்ற பிரபல ஹாலிவுட் இயக்குநர் பிலிப் ஜான் இப்படத்தை இயக்கவுள்ளார். இப்படத்தில், முதலில் சமந்தா நடிக்க இருந்த நிலையில் கால்ஷீட் பிரச்சினை காரணமாக அந்த படத்தில் இருந்து விலகியதாக கூறப்பட்டது. அதன் பின்னர் சமந்தா நடிக்க இருந்த கேரக்டரில் ஸ்ருதிஹாசன் கமிட் செய்யப்பட்டார். இந்நிலையில் தற்போது ஸ்ருதிஹாசனும் அதே கால்ஷீட் தேதி பிரச்சினையால் 'சென்னை ஸ்டோரி' படத்திலிருந்து விலகியிருப்பதாக கூறப்படுகிறது.

# புதுமுகங்கள் நடிப்பில் உருவான 'பிரேக் பாஸ்ட்'!

பிரேம் டெக்ஸ்டைல்ஸ் மற்றும் வெங்கடேஷ்வரா கார்மெண்ட் நிறுவனம் தயாரிக்கும் புதிய படம், 'பிரேக் பாஸ்ட்'. இதில் முதன்மை வேடங்களில் புதுமுகங்கள் ராஜேஷ், ரோஸ்மின், கிருத்திக் மோகன் மற்றும் அமித்தா ஆகியோர் நடிக்க, இவர்களுடன் அர்ச்சனா, மேஹாஸ்ரீ, சம்பத்ராஜ், கஸ்தூரி, மதன் பாப், ரவி மரியா, இயக்குநர்கள் பாலாஜி சக்திவேல், ரங்கநாதன் ஆகியோர் இணைந்து நடித்துள்ளனர். 'நிலாகாலம்', 'செல்லமே', 'ஆனந்ததாண்டவம்' போன்ற படங்களை இயக்கிய காந்தி கிருஷ்ணா 'பிரேக் பாஸ்ட்' என்ற புதிய படத்திற்கு கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்கியுள்ளார். இப்படத்தின் ஒளிப்பதிவை எம்.வி. பன்னீர் செல்வம் கவனிக்க,ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இப்படம் குறித்து இயக்குனர் காந்தி கிருஷ்ணா கூறுகையில்,"



"காதலர்களிடையே அன்பு மற்றும் சண்டை என்ற எவர்கிரீன் கான்செப்ட்தான் இந்தப் படத்திலும் கையாண்டு இருக்கிறோம். இப்போதுள்ள இளைய தலைமுறையினரிடையே மிகவும் பொதுவான விஷயமாக பிரேக்அப் மாறிவிட்டது. காதலில் வரும் பிரச்சினைகளை அவர்கள் சகித்துக் கொள்ளாமலும், ஒருவருக்கொருவரின் வலியை உணராமலும் இருப்பதுதான் படத்தின் கரு. இது ஒரு மியூசிக்கல் லவ் படம். பாடல்களில் ஜி.வி.பிரகாஷ் மேஜிக் செய்திருக்கிறார். மணாலி, கஜகஸ்தான், காஷ்மீர் போன்ற இடங்களில் படப்பிடிப்பு நடத்தப்பட்டுள்ளது. இந்தப் படத்திற்கு கவிஞர் வைரமுத்து பாடல்கள் எழுத, ஜி.வி. பிரகாஷ் இசையமைத்துள்ளார். இந்தத் தலைமுறை மீனரை கவரும் வகையில் உருவாகியுள்ள இந்தப்பட பாடல்கள் வெளிநாடுகளில் பிரம்மாண்டமாக படமாக்கப்பட்டுள்ளது என்கிறார்.